தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 509 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை
(28.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 26 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

சவர்க்காரம், சலவைத் தூளுக்கு கடும் தட்டுப்பாடு

02 பக்கம்

ஆளுங்கட்சி பங்காளிகளுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு

02 பக்கம்

இடைக்கால அரசுக்கு கோட்டா பச்சைக்கொடி!

கொள்கை அடிப்படையிலும் இணக்கம்: நாளை அரசியல் கட்சிகளுடன் பேச்சு

•யோ.தர்மராஜ்

நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடிகளுக்கு தீர்வாக, நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்றவகையில், கொள்கை அடிப்படையில் இணக்கத்தை தெரிவிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆளுந்தரப்பு கட்சித் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

அரசியல் ஸ்திரத்தன்மையை பேண உரிய நடவடிக்கை எடுப்பேன்

பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

நாடு அராஜக நிலைமையை நோக்கிச் செல்ல இடமளிக்கப்போவதில்லை எனவும் நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்காக எடுக்கப்படும் முடிவுகளுக்கமைய செயற்பட தயாராகவிருப்பதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஓமல்பே சோபித தேரர் தலைமையிலான பிக்குமாருடன் நேற்றுமுன்தினம் (26) அலரிமாளிகையில் மேற்கொண்ட....

02 பக்கம்

என்னை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி ஒருபோதும் கூறவில்லை

அவ்வாறு கூறமாட்டார் எனவும் உறுதியாக நம்புகிறேன் – பிரதமர் மஹிந்த

02 பக்கம்

இடைக்கால அரசின் சபாநாயகராக கரு

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வை காண்பதற்காக இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டால் அதில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு சபாநாயகர் பதவி வழங்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இடைக்கால அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காக தற்போது இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின்போது அரச தரப்பும் எதிர்க்கட்சிகளும் கரு ஜயசூரியவுக்கு சபாநாயகர் பதவியை வழங்க தீர்மானித்துள்ளன.

நாடாளுமன்றில் ஏற்கனவே அங்கம் வகித்தவர் மீண்டும் தேசியப்பட்டியல் ஊடாக வரலாம் என்ற சட்ட அடிப்படையில் தேசியப்பட்டியலினூடாக அவரை நாடாளுமன்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

பெசிலின் செருப்பு சூப் குடித்தவர் 'டீல்' என்று எங்களை விமர்சிப்பதா?

வாசுதேவவுக்கு டோஸ் கொடுத்த சஜித்

02 பக்கம்

லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் அதன் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 2,185 ரூபாவால் அதிகரித்துள்ளது.

இந்த விலை உயர்வு நேற்றுமுன்தினம் (ஏப்ரல் 26) நள்ளிரவுமுதல் அமுலுக்கு வந்தது.

இதன்படி, 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் திருத்தப்பட்ட புதிய விலை 4,860 ரூபாவாகும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் நேற்று (27), புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். (படம் - ஐ.சிவசாந்தன்)

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள கொட்டகலையில் நீண்ட வரிசை

06 பக்கம்

நாடளாவிய ரீதியில் இன்று ஹர்த்தால்!

•யோ.தர்மராஜ்

நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வைக் கோரியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுமாறு கோரியும் இன்று (28) நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது .

02 பக்கம்

உஷ்

சபாநாயகர் பதவிக்கு கரு ஜயசூரியவை போடலாம் என்ற செய்திகள் வந்த கையோடு அதனை எதிர்த்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த இடத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரியை போடுவதற்கு கோரிக்கை விடுத்துள்ளதாம். அப்படி இல்லாதபட்சத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இப்போதைய சபாநாயகரை அனுப்பும் வேலைக்கு உடன்படமாட்டோம் என்று நிபந்தனையும் முன்வைத்துள்ளதாம் சுதந்திரக் கட்சி. 52 நாட்கள் அரசியல் குழம்பம் சுதந்திரக் கட்சியினருக்கு நினைவுக்கு வந்துவிட்டது போலும் !

அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட மாட்டாது

நிதி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அரச நிறுவனங்களுக்கான செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட சுற்றறிக்கை, நிதி அமைச்சின் செயலாளரினால் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பெரும்பான்மை பலம் எங்களிடம்: நேரம் வரும்போது காட்டுவோம்!

செய்தியாளர்களிடம் சொன்னார் மைத்ரி

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே.. அமைச்சு ஆசை கொள்வதில் அர்த்தம் என்னடா இடைக்கால அரசாங்கத்திலே...

பெரும்பான்மை பலம்...

அரசாங்கம் தனக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருப்பதாக கூறினாலும் தான் அறிந்த வரையில் அவ்வாறான பெரும்பான்மை பலம் அரசாங்கத்திற்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது தரப்பிற்கு பெரும்பான்மை பலம் இருப்பதாகவும் தம்மிடம் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இரகசியமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மைத்திபால சிறிசேன இந்த கருத்துகளை வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக தமது தரப்பு முன்வைத்துள்ள யோசனைக்கமைய, இடைக்கால அரசாங்கத்தின் புதிய பிரதமர் நாடாளுமன்றத்திற்குள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும் அது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருந்தபோதிலும், இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் பதவியை பொறுப்பேற்க எதிர்பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இடைக்கால அரசின்...

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர், தாம் எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்றும் ஆனால் இது குறித்து பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவது தனக்கு தெரியும் எனவும் குறிப்பிட்டார்.

முறைப்படி அழைப்பு கிடைத்தால் அதனை பரிசீலிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற அடிப்படையில் நாட்டின் தேவைகளை நிறைவேற்ற நாங்கள் தயார். இந்த அமைப்பு மாதுளுவாவே சோபித தேரரால் உருவாக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சவர்க்காரம், சலவைத் தூளுக்கு...

தற்போது சவர்க்காரம் மற்றும் சலவைத் தூளுக்கு சந்தையில் அதிக தேவை இருப்பதாகவும், தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

எதிர்வரும் வாரங்களில் சவர்க்காரம் மற்றும் அது சார்ந்த பொருட்களின் விலையை சவர்க்கார நிறுவனங்கள் உயர்த்தும் என விற்பனையாளர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து, நுகர்வோர் விலை ஏறும் முன்பே சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களை வாங்கிக் குவித்து வருவதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

சவர்க்காரம் மற்றும் தொடர்புடைய பொருட்களின் விலை சுமார் 200 வீதம் அதிகரிக்கும் என்று நிறுவனங்கள் ஏற்கனவே வர்த்தக சமூகத்துக்கு தெரிவித்துள்ளன.

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வெறும் 1000/= மட்டுமே...

அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜனியர்

கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308

ஆளுங்கட்சி பங்காளிகளுடன்...

யோ.தம்பரஜ்

நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையில் இடைக்கால அரசாங்கம் அமைப்பது குறித்து அரசுடன் இருக்கும் கட்சித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் இன்று (28) விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் ஜனாதிபதி மாளிகையில் முற்பகல் வேளையில் இடம்பெறவுள்ளதாக ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ள ஜனாதிபதி, தற்போதைய பிரதமரும் அமைச்சரவையும் பதவி விலகியுடன் அமையவுள்ள அரசாங்கத்தின் பெயற்பாடுகள், அதில் பொறுப்பேற்கவுள்ளவர்கள் குறித்து கலந்துரையாடுவதற்கான நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளார்.

அதன்படி, முதல் கட்டமாக தற்போது அரசாங்கத்துடன் இருக்கும் கட்சித் தலைவர்களுடன் இன்று (28) பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அதற்காக, ஆளுந்தரப்புடன் இருக்கும் கட்சியின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, நாளை (29) ஆளுந்தரப்புடன் இருந்து தற்போது சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களுடன் விசேட பேச்சுவார்த்தை ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளார். இதற்காக, அவர்களுக்கு ஆளுந்தரப்பு மற்றும் சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை...

சந்திப்பின்போது பிரதமர் இதனை கூறியுள்ளார். மாதாமாக்க தேரர்கள் வெளியிட்டுள்ள கடிதம் தொடர்பாக ஓம்பே சோபித தேரர் இதன்போது பிரதமருக்கு விளக்கியுள்ளார். இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது சம்பந்தமாக பிக்குகள் இதன்போது தமது கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமாயின் அது சம்பந்தமாக மகாநாயக்க தேரர்கள், பிரதான சமயத் தலைவர்கள் மற்றும் அனைத்து கட்சித் தலைவர்களின் இணக்கத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர், ஓம்பே சோபித தேரர் உட்பட பௌத்த பிக்குகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை முக்கியமானது எனவும் இதனால், எந்த காரணத்தை கொண்டும் நாடு அராஜக நிலைமைக்கு செல்ல இடமளிக்கப்போவதில்லை எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமருடனான இந்த சந்திப்பில், ஓம்பே சோபித தேரர், அகலக சிறிசுமண தேரர், ரலுவத்தே வப்ப தேரர், பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நாளாவிய ரீதியில் இன்று...

இதேவேளை, மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், ரயில்வே தினைக்களம் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தையும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், முழு நாள் வேலை நிறுத்தப்போராட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளனர்.

இதேவேளை, அரசத்துறை, தனியார்த்துறை மற்றும் அரை அரசு நிறுவனங்களும் இவ்வாறு ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டும் என கோரி, அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சங்கம் இன்று (28) வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்தார். இவர்களுடன், மூகாமைத்துவ பிரிவு, வங்கித்துறைகள், சிறியளவான சேவை பிரிவு, அமைச்சுகளின் அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள், அரச, தனியார்த்துறைகள் என்பனவும் இணைந்துக்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, மரக்கறி விநியோகங்கள் முற்றாக நிறுத்தப்படும் என்பதோடு, சந்தைகள் மற்றும் அங்காடிகளும் இன்று மூடங்கும் என கூறப்படுகின்றது.

இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலினால் பாடு போக்குவரத்துகளுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் போக்குவரத்துகள் முன்னெடுக்கப்படும் என பொதுபோக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசுக்கு கோட்டா...

இதற்கான முதற்கட்ட பேச்சுவார்த்தை நாளை (29) ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆளுந்தரப்பிலுள்ள கட்சித் தலைவர்களுக்கு நேற்று (27) அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

நாடு முகம்கொடுத்துள்ள சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் பங்களிப்புடனும் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை நியமிக்குமாறு, மகாநாயக்க தேரர்கள், பேராயர் கர்தினால், சர்வமதத் தலைவர்கள் உள்ளிட் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் போன்றனவும் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்தக் கோரிக்கையை ஆராய்ந்து பார்த்தபோது, நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளுக்கு தீர்வாக, நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் (இடைக்கால அரசாங்கம்) ஒன்றை அமைப்பதற்கு, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற வகையில், கொள்கை அடிப்படையில் நான் இணக்கம் என்பதை தெரிவிக்கின்றேன்.

அதன்படி, தற்போதைய பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலகியுடன் அமையவுள்ள சர்வ கட்சி அரசாங்கத்தின் (இடைக்கால அரசாங்கம்) விடயம், நடைமுறையில் இருக்கும் காலம், அதன் பொறுப்புகளை வழங்கும் நபர்கள் யார் என்பது உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்களையும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்க வேண்டும்.

அதன் முதற்கட்டமாக, தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளுங்கட்சியின் தலைவர், 2020 பொதுத் தேர்தலுக்கு பின்னர் நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியில் அங்கம் வகித்த மற்றும் தற்போது சுயாதீனக் குழுவாக செயற்படும் கட்சிகளின் தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று 2022 ஏப்ரல் 29ஆம் திகதி (நாளை) முற்பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்கள் கட்சிகளின் நிலைப்பாடு மற்றும் யோசனைகளுடன் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு நீங்கள் வழங்கும் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பானது நாட்டின் அத்தியாவசியத் தேவை என்பதையும் கூட்டிக்காட்டுகின்றேன்.

பெசிலின் செருப்பு சூப் குடித்தவர்...

யோ.தம்பரஜ்

உலக காக்கை தினத்தில் காக்கையால் பலம் பெற்றுக்கொண்ட, திருட்டு காக்கையிடம் பங்கு களை பெற்றுக்கொண்ட, பெசில் ராஜபக்ஷவின் செருப்பு சூப் குடித்த தரப்பினர், நாங்கள் ஒப்பந்தம் (டீல்) வைத்திருப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். நாட்டை சீரழித்த திருடர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது எழில் பிரேமதாச தலைமை யிலான ஐக்கிய மக்கள் கூட்டணியோ அத்தகைய டீலினை செய்யாது என எதிர்க்கட்சித் தலைவர் எழில் பிரேமதாச தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த அடக்குமுறை மிக்க கொடுங் கோல் அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த ஐக்கிய சக்தி பாத யாத்திரை யின் இரண்டாவது நாள் பேரணி நேற்று (27) ஆரம்பமாகிய போது அங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

69 இலட்சம் வாக்குகளைக் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் 145க்கும் மேற்பட்ட ஆளணங்களுடன் அதிகாரங்கள் மற்றும் மூன்றிலிருண்டு பெரும்பான்மையை கொடுத்து உருவாக்கிய அரசாங்கம், நாட்டை ஏமாற்றியுள்ள நேரத்தில், இந்த மோசடிக்காரர்களுடன் எமக்கு எந்த ஒப்பந்தமும் (டீல்) இல்லை.

இன்று (நேற்று) உலக காக்கை தினம் என் பதோடு, இந்த காக்கையால் பலம் பெற்றதுடன், திருட்டு காக்கையிடம் பங்குகளை பெற்ற, பெசில் ராஜபக்ஷவின் செருப்பு சூப் குடித்த தரப்பினர், நாங்கள் ஒப்பந்தம் (டீல்) வைத்திருப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். நாட்டை சீரழித்த திருடர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது எழில் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியோ அத்தகைய டீலினை செய்யாது.

நன்பர்களே, நாங்கள் எப்படி அரசாங்கத்துடன், ஒப்பந்தம் (டீல்) செய்வது. இந்நாட்டு இளைஞர்கள், எவ்வித அரசியல் தலைமீடுகள் மற்றும் தலைமைத்துவம் இல்லாது இலட்சக்கணக்கானவர்கள், உயிர்களை தியாகம் செய்து காலி முகத்திடலில் போராடும்போது, இந்த திருடர்களுடன் நாம் ஒப்பந்தம் (டீல்) செய் வோமா? என்ன ஒரு நகைச்சுவை?

இவர்கள் கூறுவது, அரசாங்கத்திற்குள் இருக்கும் நெருக்கடியாகும். ஒரு பகுதியினர் ஜனாதிபதியை செல்லுமாறும் மற்றொரு தரப்பினர் பிரதமரை பதவியில் இருக்குமாறும் கூறுகின்றனர். இன்னும் சிலர் பிரதமரை வெளியேறுமாறும் ஜனாதிபதியை பதவியில் இருக்குமாறும் கூறுகின்றனர். இந்த திருடர்கள் இருக்கும், இலஞ்சம் மற்றும் மோசடிக்கு நாங்கள் ஆதரவளிக்காதபோது, எங்களுக்கும் ஒப்பந்தம் (டீல்) இருப்பதாக கூறுகின்றனர். எங்களுடைய டீல் (ஒப்பந்தம்) இந்த நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களுடனே இருக்கின்றன. மாறாக, இந்த திருடர்களுடன் இல்லை – என்றார்.

என்னை இராஜினாமா செய்யுமாறு...

ஜனாதிபதி என்னை இராஜினாமா செய்யுமாறு ஒருபோதும் கூறவில்லை. அவ்வாறு கூறமாட்டார் எனவும் உறுதியாக நம்புகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதேச சபைத் தலைவர்கள், மேயர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுடன் நேற்று (27) அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வெளிநாட்டு உதவிகளை பெற்றோலும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்யக்கூடாது என பிரதேச சபை தலைவர்கள் மற்றும் மேயர்கள் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினர்.

குறித்த சந்திப்பின்போது பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு,

கடந்த காலங்களில் சந்தித்து பேசுவதற்கு எங்களுக்கு அதிக நேரம் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன். ஆனால் இன்று நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சந்தித்து கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தீர்வு காண்பதற்கான செயற்பாடுகள் குறித்து பேச சிலர் தமது ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

எனினும், இன்று நாட்டின் நிலைமை முற்றிலும் மாறுபட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருபுறம் பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.

வரலாற்றில் தொடங்கிய வேறு காரணங்களுக்காக இந்த நிலைமை உருவாக்கப்பட்டது. இந்த நெருக்கடியிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தற்போது எமக்கு உள்ளது. எனவே அதற்காக நாம் ஒன்றினைந்து செல்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

இந்த அரசாங்கத்தை நாம் பொறுப்பேற்கும் போது அனைத்து வகையிலும் வீழ்ச்சியடைந்த ஒரு நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றோம். அப்போது பொருளாதாரத்தில் மட்டுமல்ல தேசிய பாதுகாப்பிலும் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. தீவிரவாதிகளோ, பயங்கரவாதிகளோ இல்லாத நாட்டை உருவாக்கித் தருமாறு பெரும்பாலான மக்கள் கோரிக்கை வைத்தனர். இன்று நாம் அந்த கோரிக்கையை ஸரியாக நிறைவேற்றிவிட்டோம் என்று நினைக்கிறேன்.

தரிசு நிலமாக காணப்பட்ட நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பெரும் முயற்சி செய்துள்ளோம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

இவற்றுக்கு மத்தியில்தான் நாம் சமீபத்தில் கொவிட் தொற்றுநோயை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதுபோன்ற ஒரு தொற்றுநோய் பற்றி முழு உலகமும் இதற்கு முன் அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சவால் நமக்குப் புதிது. ஆனால் உங்கள் அனைவரின் ஆதரவோடு நாங்கள் அதை வெற்றிகரமாக எதிர்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இலட்சக்கணக்கானோர் இருக்கும்போது, நம் நாட்டின் மரண விகிதத்தை பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக பேண முடிந்தது.

மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவப் பணியாளர்கள், இராணுவம், பாதுகாப்புப் படையினர் போன்றோர் இதற்கு பங்களிப்பு செலுத்தியுள்ளனர் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மக்களும் அதற்கு ஆதரவளித்தனர். இது நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படாவிட்டாலும், ஒரு அரசாங்கமாக எங்களால் இந்த கொவிட் தொற்றுநோயிலிருந்து முழு நாட்டையும் பாதுகாக்க முடிந்தது.

ஆனால், மக்களை அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கான சவாலை நாங்கள் வெற்றி கொண்டோம். இன்று அவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானோரே காலிமுகத்திடல் மைதானத்திற்கு வந்துள்ளனர். அங்கு வந்த எம்மை வெளியேறுமாறு கூறுகின்றனர். நாம் அனைவரும் மக்களின் ஆணையாலேயே இந்த இடங்களுக்கு வந்துள்ளோம். அந்த மாியாதை இன்றும் மக்களுக்கு உள்ளது. மக்கள் இறையாண்மை என்பது நாட்டின் அரசியலமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளது. நெருக்கடியான நிலையில் நாட்டை விட்டு வெளியேற மக்கள் எம்மை நியமிக்கவில்லை.

வேண்டியளவு குற்றச்சாட்டுகளை முன்வைக்க லாம். ஆனால் அவை நிரூபிக்கப்பட வேண்டும். அப்படி இல்லாமல் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக இந்த நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச்செல்ல முடியாது.

நாம் வரலாற்றின் சவால்களில் இருந்து தப்பித்து ஓடியவர்கள் அல்ல என்பதை கூறத் தேவையில்லை. இந்த பொருளாதார சவாலில் இருந்து தப்பித்து ஓடமாட்டோம். எங்களிடம் குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார முகாமைத்துவக் கொள்கைகள் உள்ளன. அதற்கமைய இந்த சவாலை சமாளிக்க முடியும் என்று நாங்கள் நம்பிகிறோம்.

மத்திய வங்கியிடம் பொதுநிதிநிறுவனங்களுக்கு மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்களை கடந்த காலங்களில் எமக்கு நியமிக்க முடிந்தது. அண்மையில் சீனப் பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினேன். சீனாவின் ஆதரவை எமக்கு பெற்றுத்தருவதாக அவர் உறுதியளித்தார். பல நட்பு நாடுகளுடனும் கலந்துரையாடினேன். இதன் விளைவாக, அவர்கள் ஏற்கனவே எங்களுக்கு உதவத் தொடங்கியுள்ளனர்.

நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று இலங்கையின் நிலைமையை கூட்டிக்காட்டிய போது, தற்போது எமக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். நமது நிதியமைச்சர் அலி சப்ரி சென்று அதைச் செய்தார். சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று அதிகாரிகளுடன் நான் கலந்துரையாடினேன். எங்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அவர்களின் சில கோரிக்கைகளுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும். அவற்றை பின்பற்றி நாம் முன்னேற வேண்டும். நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். வெளிநாட்டு உதவியை பெற்றோலும் நாட்டை கட்டியெழுப்ப தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

அந்த சமயங்களில்தான் சிலர் இங்கும் அங்கும் சென்று பேயாட்டம் ஆடுகின்றனர். அந்த பேய்களுக்கு பயந்தால் கல்லறையில் வீடு கட்ட மாட்டார்கள் என்பார்கள். அப்படிப்பட்டவர்களை நான் பார்த்திருக்கிறேன். எனவே அவர்கள் அடுத்து என்ன செய்வார்கள் என்பதைப் பார்க்க காத்திருக்கிறோம். எனவே, உங்கள் பலத்தால் அவர்கள் விரும்பியவாறு நாட்டைக் கட்டியெழுப்பவோ, நாட்டைக் கைப்பற்றவோ, எம்மை ஆட்டிப்படைக்கவோ நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பதை நினைவூட்டுகிறேன்.

நீங்கள் எம் மீது நம்பிக்கை வைத்து பணியாற்றுவது குறித்து, நாம் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோன்று இன்னொரு விடயத்தை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், ஜனாதிபதி என்னை ஒருபோதும் இராஜினாமா செய்யுமாறு கூறவில்லை. அவ்வாறு கூறமாட்டார் எனவும் உறுதியாக நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

தமிழன் குறுஞ்செய்திகளை உடனுக்குடன் பெற...

பதிவு செய்வதற்கு

Dialog மாயையாவற்கள்...
Thamilan என்று Type செய்து 7172 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

SLTMOBITEL The Connection மாயையாவற்கள்...
REG(இடைவெளி)Thamilan என்று Type செய்து 77111 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

airtel மாயையாவற்கள்...
தினசரி :
ACT(இடைவெளி)TAM1 என்று Type செய்து 7544 என்ற இலக்கத்துக்கு SMS செய்க
மாதாந்தம் :
ACT(இடைவெளி)TAM என்று Type செய்து 7544 என்ற இலக்கத்துக்கு SMS செய்க

தமிழன்

மாதமொன்றுக்கு ரூ.30 + வரி அடங்கலாக

தமிழன் வாசகர்களே!

தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை www.thamilan.lk ஊடாக மாத்திரமின்றி www.thamilannews.com மூலமாகவும் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்

தமிழன் தமிழன்

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு விவகாரம்:

சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதவான் நீதிமன்றம் உத்தரவு

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில், துப்பாக்கிச் சூடு நடத்த கட்டளையிட்ட பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட சகல பொலிஸ் அதிகாரிகளையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கேகாலை நீதவான் நீதிமன்றத்தினால் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று (27) மூன்றாவது நாளாகவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கேகாலை நீதவான் நீதிமன்ற நீதவான் வாசனா நவரத்னவின் தலைமையில் இந்த விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இந்த விசாரணையின்போதே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். ரம்புக்கனை புகையிரத நிலையத்துக்கு அருகில் புகையிரத வீதியை மறித்து கடந்த 19ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை, அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு பொலிஸாரினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்ததுடன் கண்ணீர்ப்புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனால் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

மேலும் இந்தச் சம்பவத்தில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்திருந்ததுடன் 27 பேர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் ரம்புக்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ் நூலகம் மற்றும் பல்கலைக்கு அமெரிக்கத் தூதுவர் நேற்று விஜயம்

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் யாழ்ப்பாண பொது நூலகம் மறறும் பல்கலைக்கழகம் என்பவற்றுக்கு நேற்று (27) விஜயம் செய்திருந்தார்.

பொது நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட தூதுவரை யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் துரைராஜா ஈசன் வரவேற்றார். இதன்போது மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொண்டார்.

பல்கலைக்கழகத்துக்கான விஜயத்தின் போது, யூ. எஸ். எயிட் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் சமாதானமும், முரண்பாடுகளுக்கான தீர்வுகளும் என்ற முதுமாணிக் கற்கைநெறிக்கான அனுசரணையாளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்கத் தூதுவர் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், யூ. எஸ் எயிட் நிறுவன அதிகாரிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இதன்போது, பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், யூ. எஸ். எயிட் நிறுவன அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

எரிவாயு தட்டுப்பாட்டால் வெதுப்பகங்களுக்கு பூட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இயங்கி வருகின்ற வெதுப்பகங்கள் சில எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மூடப்பட்டுள்ளதுடன் இதனால் தொழிலாளர்கள் பலர் வேலை வாய்ப்புகளை இழந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வவுனியா நகரின் குட்செட் வீதி மற்றும் பட்டானிச்சூர் ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்ற இரண்டு வெதுப்பகங்கள் நேற்று (27) முதல் மூடப்பட்டுள்ளது.

இதனால் வாடிக்கையாளர்கள் உட்பட தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு தட்டுப்பாடு நீங்கிவிட்டதாக அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படுகின்றபோதும் எரிவாயு விநியோக நிலையங்களில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் மக்களுக்கு எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

வெதுப்பகங்களில் எரிவாயு தட்டுப்பாட்டினால் வெதுப்பகங்களை மூடவேண்டிய நிலை உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் பதவி விலகக்கோரி அலரிமாளிகையின் முன்னால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'மைனா கோ கம' போராட்டம் நேற்று (27) இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் பழிவாங்கும் எண்ணம் கொண்ட வைராக்கியம் மிக்கதாக இடைக்கால அரசாங்கம் அமைந்துவிடக்கூடாது

இராஜாங்க அமைச்சர் முஸாரப் தெரிவிப்பு

எப்படியாவது அதிகாரத்தினை அடைந்து கொள்ளவேண்டும் எனும் வேட்கை வாய்ந்ததாகவோ அல்லது யாரையும் புறக்கணிக்கும் நோக்கம் மிக்கதாகவோ, அரசியல் பழிவாங்கும் வைராக்கியம் மிக்கதாகவோ இடைக்கால அரசாங்கம் அமைந்து விடக்கூடாது என புடவைக் கைத்தொழில் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எஸ். எம். எம். முஸாரப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இனவாதம் மதவாதம் குறுகிய தேசியவாதம் போன்ற பிற்போக்குவாத சிந்தனைகளால் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதற்கு உலகில் காணப்படும் மிகச் சிறந்த உதாரணங்களில் இலங்கையும் ஒன்றாகும் என்பது எனது நீண்டகால அபிப்பிராயமாகும். ஒற்றுமையுடன் அரசியல் சுயலாப நோக்கங்களை முதன்மைப்படுத்தாது ஒரு தேசமாக எழுந்து வீறு நடை போடுவதற்கு பல பொன்னான சந்தர்ப்பங்கள் வாய்த்தபொழுதும் குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட அரசியல் தலைமைகளால் அது சாத்தியப்படவில்லை.

தேசிய நலனை குறிக்கோளாகக் கொண்ட சுபீட்சமிக்க எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்பும் திட்டம் கொண்ட தலைவர்கள் நமது குறைவிருத்தி அரசியல் கலாசாரத்தில் எழுச்சி பெற வாய்ப்பில்லை என்பதை வரலாறு சொல்லி நிற்கிறது.

ஆட்சியில் இருக்கும் ஆளுங்கட்சி கொண்டுவரும் திட்டங்களை எதிர்க்கட்சி நிராகரிப்பதும், ஆளுங்கட்சி கொண்டு வந்து எதிர்க்கட்சியால் நிராகரிக்கப்பட்ட அதே திட்டம் மீண்டும் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்ததும் கொண்டுவரப்படும்பொழுது ஆளுங்கட்சியாக அப்பொழுது இருந்த தற்போதைய எதிர்க்கட்சி எதிர்ப்பதும் வேடிக்கையாகிப்போன நமது அரசியல் கலாசாரத்தில் எப்படி நாடும் நாட்டு மக்களும் அபிவிருத்தியடைய முடியும்?

இந்தக் கேள்வியை எனது அரசியல் பிரவேசத்தில் இருந்து இன்றுவரை நான் பதிவாக்கியே வந்திருக்கின்றேன். கட்சி அரசியலை விட நாடு தேசம் என முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகாதா எனும் எனது நீண்ட அங்கலாய்ப்பு நிறைவேறும் தருணம் நாட்டில் எழுந்திருக்கும் எதேச்சையான மக்கள் எழுச்சியினால் உருவாகுமாக இருந்தால் அதற்கு என்னாலான அத்தனை அர்ப்பணிப்பினையும் வழங்குவதற்கு சித்தமாகவுள்ளேன்.

நாட்டில் தற்பொழுது பேசுபொருளாகியிருக்கும் தேசிய அரசாங்கம் அல்லது சர்வகட்சி அரசாங்கம் எனும் கருத்தாடல் குறுகிய நலம் கொண்ட கட்சி அரசியல் பண்புகளை வெற்றிகரமாக கடந்து நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் அரவணைத்து தேசிய அபிவிருத்தியினையும் நாட்டில் எழுந்திருக்கும் பொருளாதார சீரழிவினை வெற்றிகரமாக எதிர்கொள்வதனையும் இலக்காகக் கொண்டு சுபீட்சமிக்க எதிர்கால இலங்கையினை கட்டியெழுப்பும் திடசங்கற்பம் பூண்டதாக இருந்தால் அதற்கு என்னாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு நான் தயார்நிலையிலேயே உள்ளேன்.

எப்படியாவது அதிகாரத்தினை அடைந்து கொள்ள வேண்டும் எனும் வேட்கை வாய்ந்ததாகவோ அல்லது யாரையும் புறக்கணிக்கும் நோக்கம் மிக்கதாகவோ அல்லது அரசியல் பழிவாங்கும் வைராக்கியம் மிக்கதாகவோ இடைக்கால அரசாங்கம் அமையாமல் நாட்டின் இக்கட்டான நிலைமை இல்லாமலாக்கி இந்த புதிய சூழ்நிலையை பயன்படுத்தி நாட்டின் பாரம்பரிய அரசியல் பொறிமுறையை உலகின் வெற்றிகரமான நாடுகளின் அரசியல் பொறிமுறை போல் மாற்றியமைக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது அவா.

இந்தப் புனிதமான பணியினை இந்த தேசத்துக்காக செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற யார் முன்வருவார்களோ அவர்களே இந்த தேசத்தின் பற்றாளர்களாகக் கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரலாம்

ஐ.தே.க. யோசனை

நம்பிக்கையில்லாப் பிரேரணையினூடாக பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவிகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கும் என்பதால் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதனூடாக மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றலாம் எனவும் சூட்சுமமாக செயற்பட வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவருவது என்பது காலதாமதத்தை ஏற்படுத்தும். அதன் காரணமாக அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதி மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்காக ஏற்பாடுகள் இருக்கின்றன. இதுதொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதில் எந்தவொரு சிக்கலும் இல்லை. ஆனாலும், நம்பிக்கையில்லாப் பிரேரணையினூடாக காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் உள்ளிட்ட முழு நாட்டு மக்களினதும் நோக்கம் நிறைவேற்றப்படுமா என்பது தொடர்பில் சிந்தித்து பார்க்க வேண்டும்.

சபாநாயகர் தலைமையிலான விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இன்று (28) பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அரசியலமைப்புத் திருத்தத்துடன் தொடர்புடைய யோசனை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக சபாநாயகரினால் இந்த விசேட கூட்டம் நடத்தப்படவுள்ளது. அதாவது, 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஒரு சில கட்சிகள் மற்றும் குழுக்கள் அரசியலமைப்புத் திருத்தத்துடன் தொடர்புடைய பல்வேறு யோசனைகளை சபாநாயகரிடம் முன்வைத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அண்மையில் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்த அணியினர் என இருதரப்பினரும் அரசியலமைப்பு திருத்த யோசனையை சபாநாயகரிடம் முன்வைத்துள்ளனர். இதேவேளை, அடுத்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுக்கும் முறை மற்றும் அதன் நிகழ்ச்சித்திட்டம் என்பன தொடர்பில் இந்த கலந்துரையாடலில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள எம்.பிக்களுக்கென விசேட நிகழ்ச்சி

இலங்கையின் தற்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வது எவ்வாறு என்ற தொனிப்பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட நிகழ்வொன்று நேற்று (27) நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற அரசாங்க நிதி பற்றிய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சியில் பிரதான வளவாளராக கலாநிதி ஸ்வர்னிம் வாக்லே கலந்துகொண்டார். பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மூலோபாய விசேட நிபுணராக இவர் 36 நாடுகளுடன் பணியாற்றி வருகிறார். மேலும் உலக வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளராகவும் பணியாற்றியுள்ளார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க மற்றும் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 28ஆம் திகதி, வியாழக்கிழமை

தமிழர் முன்னுள்ள பொறுப்பு!

அரசாங்கத்துக்கு எதிராகவும், பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தியும் இலங்கையில் நடைபெறும் போராட்டங்களில் தமிழ்ச் சமூகத்தின் வகிபாகம் என்ன என்பது கேள்விக்குறியாகவே தொடர்கிறது.

அரசியலுக்கு அப்பால் சாத்வீகப் போராட்டங்களுக்கு தமிழ் சிவில் சமூகத்தின் கார்த்திமான பங்களிப்பு தேவையானதாக இருக்கும் முக்கிய காலகட்டமிது.

தென்னிலங்கையில் இன்று நடைபெறுகின்ற போராட்டங்கள் பொருளாதார இடர்ப்பாடுகளின் விளைவாக மூண்டவை. முன்னரைப் போலன்றி மிகவும் இனையவர்களும், படித்தவர்களும் பெருமளவில் பங்கேற்கிறார்கள். ஆனால், பொருளாதார நிவாரணம் கேட்டு சாதாரண மக்கள் வீதிகளில் இறங்கியிருப்பதை செவிசாய்க்காமல் ஜனாதிபதியும், அரசாங்கமும் அலட்சியம் செய்வதால் நாளடைவில் அவை அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும் போராட்டங்களாக முனைப்படைந்து இன்று உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

பௌத்த, சிங்கள பேரினவாத போதையை ஊட்டி தங்களைப் பிழையாக வழிநடத்திய ராஜபக்ஷக்கள் நாட்டை வங்குரோத்து அடையச் செய்துவிட்டார்கள் என்ற புரிதல் சிங்கள சமுதாயத்தின் கணிசமான பிரிவினர் மத்தியில் வந்திருக்கிறது. அதற்காக அவர்கள் தமிழர்களின் அபிலாஷைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வக்களாக மாறிவிட்டார்கள் என்றோ, மாறுவார்கள் என்றோ அர்த்தமாகாது. ஆனால், அந்தப் புரிதல் மேலும் அவர்கள் மத்தியில் விரிவடையக்கூடியதான ஒரு தந்திரோபாயத்தையே தமிழ் அரசியல் சக்திகள் கையாளவேண்டும்.

அதை விடுத்து நாம் கஷ்டப்பட்டபோது நீங்கள் குரல் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் கஷ்டப்படும்போது நாம் ஒருமைப்பாட்டைக் காட்டமாட்டோம் என்று விதண்டாவாதமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடாது. காலமாற்றத்துக்கேற்ப தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

தமிழர்கள் நெடுகவும் கடந்த காலத்தில் வாழக்கூடாது. கடந்தகால அனுபவங்களில் பட்டறிவுகளில் இருந்து படிப்பினைகளைப் பெற்று புதிய பாதையை வகுக்கவேண்டும். மாறிவரும் உலகில் புதிய வாய்ப்புகளை நாம் தவறவிடவும் கூடாது. இன்று ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போதான பொருளாதார இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு சமாளித்தவர்கள் நாம். தற்போதைய நெருக்கடியையும் அதுபோலவே கடந்து செல்வோம் என்று கூட சிலர் பொருந்தாத்தன்மையாக பேசுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

அவர்களையும், எம்மையும் அவலத்துக்குள்ளாக்குகிற பொருளாதார இடர்ப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரக் கோரியும், அந்த இடர்ப்பாடுகளுக்கு காரணமான ஆட்சியாளர்களை விரட்ட வேண்டியும் நடைபெறுகின்ற போராட்டங்களிலிருந்து எம்மைத் தூரவிலக்குவதன் மூலம் நாம் சாதிக்கப்போவது எதுவும் இல்லை.

இன, மத ரீதியான அரசியல் கோஷங்களுக்கு இனி நாட்டில் இடமில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ள பெரும்பாலான பௌத்த பிக்குமாரும், சிங்களவர்களும் இந்த அரசுக்கு கடந்த காலங்களில் ஆதரவளித்தவர்களே. போர் வெற்றி, மின்சாரக் கதிரை, மலட்டு மாத்திரைகள், முஸ்லிம் தீவிரவாதம் போன்ற காலகாலத்தில் வந்த குற்றச்சாட்டுகளையெல்லாம் நம்பிய சிங்கள மக்கள் இன்று ஒரு இடத்திற்கு வந்துள்ளனர். அந்த இடத்திலும் அவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது உசிதமானதல்ல.

வரலாற்றைப் பற்றி, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றி மறந்து சிங்கள மக்களுடன் கொண்டாட்டம் நடத்துவதல்ல இன்றைய தேவை. இனிமேல் அப்படித் தவறுகள் நடந்துவிடக்கூடாதென அவர்களுக்கு எடுத்துரைப்பதே இன்றைய காலத்தின் கட்டாயம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மக்கள் புரட்சி என்பது ஜனாதிபதி, பிரதமர் இல்லங்களுக்கு முன்பாக கூடாரம் இட்டு தங்கி மேற்கொள்ளுமளவுக்கு இலங்கையில் முன்னேறியுள்ளதென்பது உலகிற்கே முன்னுதாரணமாகியுள்ள நிலையில், அந்த மக்கள் சக்திக்கு கைகொடுத்து அதன்பின்னர் அபிலாஷைகளை வெல்லவேண்டியது தமிழ்ச் சமூகத்தின் முன்னுள்ள மிகப்பெரும் பொறுப்பாகும். எழுந்தமானத்தில், தமிழ் தீவிர அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் இது முரணாக இருந்தாலும் ஆழ்ந்த அரசியல் ஞானம் உள்ளவர்களுக்கு இதன் உண்மைத்தன்மை புரியும்.

சரியுமா மஹிந்தவின் சாம்ராஜ்யம்?

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகுவாரா, இல்லையா என்பதுதான் நாட்டில் இப்போது பேச்சு...

கடந்த திங்கட்கிழமை இரவு அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர் ஜனாதிபதி மாளிகையில் கோட்டா, மஹிந்த, சமல், பெசில் ஆகியோர் ஒன்றுகூடி ஆலோசனைகளை நடத்தினர்...

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகவேண்டும் என்பதுதான் சமல், கோட்டாவின் கோரிக்கை...

என்றும் பெரிய அண்ணனின் சொல்லைத் தட்டாத மஹிந்த அதற்கு சம்மதித்த போதும், பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகக் கூடாதென்று பிடிவாதமாக இருந்திருக்கிறார் பெசில்...

கம்மன்பில 120 எம்.பிக்கள் இருப்பதாக சொல்வது எம்மை அச்சுறுத்துவே... அப்படியிருந்தால் அவர்கள் காட்டட்டும்... எங்களுக்கு 105 பேருக்கும் மேல் ஆதரவுள்ளது. தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்காது என்று அறிந்தேன். எமக்கு ஆதரவளிக்கும் எம்.பிக்களின் எண்ணிக்கை இன்னும் கூடும். நாடாளுமன்றம் கூடும் முன்னர் அதனை நான் செய்வேன். அதுவரை பதவியை இராஜினாமா செய்யவேண்டாம்... என்று இங்கு பெசில் ஆவேசமாகப் பேசியதாகத் தகவல்.

ஆனால், பிரதமர் கௌரவமாகப் பதவி விலகினால் நல்லது என்று விளக்கிய சமல், அப்படி நடந்தால் இப்போதுள்ள மக்களின் போராட்டம் கொஞ்சம் தணியும் என்ற சாரப்பட பதிலளித்துள்ளார்.

முதலில் பிரதமரை அகற்றி, பின்னர் சில வாரங்களில் சபாநாயகரையும் அகற்றி, ஜனாதிபதியையும் குற்றவியல் பிரேரணை மூலம் அகற்ற முயல்வார்கள்... பிறகு பெரும் விளைவுகள் வரலாம்... என்று அதற்கு பதிலளித்துள்ளார் பெசில்...

பிரதமர் பதவி விலக மாநாயக்க தேரர்மார் கேட்பதால், அப்படி நடக்காத பட்சத்தில் அவர்கள் தங்களை சந்திப்பதற்குக்கூட நேரம் தராத நிலைமை வரலாம். அது மக்கள் எதிர்ப்புக்கு மேலும் வலுவூட்டும் என்று இங்கு பேசப்பட்டது...

நான் பதவி விலக மாட்டேன். நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி என்னை விலக்கட்டும். நான் எதிர்க்கட்சியில் சென்று அமர்கிறேன். எனக்கு எதிராக வாக்களிப்போரையும் நான் நேரடியாகப் பார்க்க ஆசைப்படுகிறேன்... எதிர்க்கட்சியில் இருந்து நான் அரசியல் செய்வேன். நான் என்ன செய்வேன் என்பதை அப்போது பாருங்கள்... என்று இங்கு குறிப்பிட்ட பிரதமர், இப்போது பலரின் உண்மை முகங்கள் அம்பலமாகியுள்ளதாகவும் சாடியுள்ளார்.

இது ஒரு பக்கமிருக்க, மறுபக்கம் டலஸ், மைத்ரி உட்பட்டோர் நகர்த்திவரும் காய்கள் அவர்களுக்கு வெற்றியைத் தந்துள்ளதாகத் தெரிகிறது...

22 அமைச்சர்கள்... அதனைக் கண்காணித்து ஆலோசனை வழங்க தேசிய நிர்வாக சபை... இடைக்கால அரசு இதுதான்... தேசிய சபையில் அனைத்துக்கட்சித் தலைவர்கள்... அமைச்சரவையில் தகுதியானவர்களுக்கு இடம்... என்று பேச்சு நடத்தப்படுகின்றது.

இந்தப் பேச்சுகள் குறித்தான தகவல்கள் அவ்வப்போது ஜனாதிபதியின் காதுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதேசமயம் பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்கள் இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குகின்றனர். அவர்களில் ஒரு தரப்பினர் நேற்று புதன்கிழமை ஜனாதிபதியை சந்தித்து கடிதமொன்றைக் கையளித்து புதிய இடைக்கால அரசை அமையுங்கள் என்று கேட்டுள்ளனர்...

கோட்டா - மஹிந்த உறவில் விரிசல்...

கடந்த சில நாட்களாக ஜனாதிபதி தம்பிக்கும், பிரதமர் அண்ணனுக்குமிடையில் பெரும் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது...

பொதுஜன பெரமுன எம்.பிக்களின் "டபிள் கேமும்" இதற்கொரு காரணம். உதாரணத்திற்கு நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பொன்னாண்டோ அன்று மாலை இடைக்கால அரசு தேவையெனவும், பெரும்பாலான எம்.பிக்களின் ஆதரவு அதற்குள்ளதாகவும் அறிக்கை விட்டுள்ளார்.

இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி இஷ்டப்படுகிறார் என்பதால் அவரை சந்திக்கும்போது அவருக்கு ஆதரவு தெரிவிப்பதும், பின்னர் பிரதமர் தொலைபேசி அழைப்பெடுத்தால் பிரதமர் பதவியைத் தொடர அவருக்கு ஆதரவைத் தெரிவிப்பதும் பொதுஜன பெரமுன எம்.பிக்களுக்கு வாடிக்கையாகி இருக்கிறது...

இதற்கிடையில் இந்தியாவும், சீனாவும் இலங்கை அரசியலில் புகுந்து விளையாடுகின்றன... ஜனாதிபதி பக்கம் இந்தியா நிற்கிறது. பிரதமர் பக்கம் சீனா நிற்கிறது என்று பேசப்படுகிறது. இதனால் கொழும்பில் இப்போது எம்.பி. ஒருவரின் விலை தலைக்கு பல கோடிகள் என்ற ரீதியில் பேசப்படுகின்றன. அதுவும் டொலர்களில்...

கோட்டாவா, மஹிந்தவா வெல்வார் என்று பேசப்பட்டு இப்போது அது இந்தியாவா, சீனாவா என்று பேசுமளவுக்கு வந்திருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் அப்பால், பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து கையொப்பமிடும் எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகம் (113 தாண்டி) வந்தாலும்கூட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்படும் நாளில் அந்த எம்.பிக்கள் நாடாளுமன்றம் வரவில்லையெனில் கதை கந்தல்தான்...

இப்போதைய நிலைவரப்படி விமல், கம்மன்பில அணியின் கைகள் ஓங்கியிருக்கின்றன. அதற்குக் காரணம் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் சிங்கள வாக்குகளை மட்டும் நம்பியுள்ளனர்.

விமல் இருக்கும் இடத்திற்கு எவன் போவான்? என்று கேட்பது தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் மட்டுமே. ஆனால், விமல், கம்மன்பிலவின் வாய்வார்த்தைகளை அறிந்த தென்னிலங்கை எம்.பிமார் அவர்களைப் பகைத்துக் கொண்டு மக்களிடம் சென்றுவிடமுடியாது என்றே கருதுவதாகத் தெரிகிறது...

எம்.பிக்களின் ஆதரவைப் பெற நடத்தும் பேச்சுகளின் போதெல்லாம், ஊருக்கும், தொகுதிக்கும் எப்படி செல்வீர்கள்? எப்படி மக்களை சந்திப்பீர்கள் என்பதை யோசியுங்கள்... என்று கூறி அச்சத்தை உண்டுபண்ணியே பேச்சை ஆரம்பிக்கிறது விமல் அணி... இதனால் ஊர்ப்புற எம்.பிக்கள் பலர் விமல், கம்மன்பில பின்னால் திரண்டுள்ளனர்...

இந்த நெருக்கடியான சூழலில், முக்கியமான அரச அதிகாரிகள் நாட்டை விட்டு புறப்பட்டுள்ளனர். அவர்கள் திரும்பி வருவார்களா என்பது தெரியவில்லை... அது தவிர அரச தலைவர்கள் பக்கத்தில் இருந்த அதிகாரிகள் இப்போது அலுவலகங்களுக்கு வருவதே குறைவு... பலர் அடுத்த நகர்வுகளுக்கு ஆயத்தமாகி செட் ஆகியுள்ளனர்...

நாடாளுமன்றம் கூடும் முன்னர் பல மாற்றங்கள் வரும் வாய்ப்பே இருக்கிறது. இடைக்கால அரசை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி மிக உறுதியாக இருக்கிறார். அதில் மாற்றமில்லை.

அப்படி அவர் செய்தால் இடைக்கால அரசு குறித்தான தங்களது கோரிக்கைக்கு மதிப்பளித்தார் என்று கருதி, மாநாயக்க தேரர்கள் காலிமுகத்திடலுக்கு வரலாம்... ஜனாதிபதி வீடு செல்லக்கோரும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசி உத்தரவாதமொன்றை ஜனாதிபதி சார்பில் வழங்கலாம்... மாநாயக்க தேரர்களின் பேச்சைத் தட்ட முடியாத நிலைமை போராட்டக்காரர்களுக்கு ஏற்படலாம்...

நேற்று புதன்கிழமை, பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பெரும்பான்மையானோர் கையொப்பமிட்ட கடிதமொன்றை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர். இனி அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்வார் ஜனாதிபதி. என்ன நடந்தாலும் பிரதமரை பதவி நீக்கம் செய்யமாட்டார் ஜனாதிபதி... ஏனெனில், இடைக்கால அரசின் பிரதமர் ஒருவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தால் மஹிந்தவின் பிரதமர் பதவி வலுவற்றதாகிவிடும்...

இடைக்கால அரசில் சில அமைச்சுகள் ஜனாதிபதியின் கீழ் வரவுள்ளன... சில அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார்... பாதுகாப்பும், ஊடகமும் ஜனாதிபதியின் கீழ் அல்லது அவர் சொல்பவருக்கு வழங்கப்படவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது...

சஜித் ஏன் இடைக்கால அரசை நிராகரிக்கிறார்..?

இடைக்கால அரசில் பதவியேற்றால், மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ஆகிவிடுவார். இப்போதுள்ள நெருக்கடியை தீர்க்க முடியாமற்போக, மக்கள் ஆதரவும் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லையென்றாகிவிடும் என்று கருதுகிறார் சஜித்...

அதற்குள் சம்பிக்க தனக்கென ஒரு அணியை திரட்டிக்கொண்டிருக்கிறார்... இடைக்கால அரசில் பிரதமர் பதவியை சம்பிக்கவுக்கு வழங்குமாறு ஒரு தரப்பு கேட்டபோது ஜனாதிபதி அதற்கு சம்மதிக்கவில்லை.

ஆனால், பொன்சேகாவுக்கு முக்கிய அமைச்சொன்றைக் கொடுக்கலாமென்று ஆலோசிக்கப்பட்டுள்ளது...

இடைக்கால அரசு வருமாயின், எதிர்க்கட்சியில் அமர்ந்து அடுத்த தேர்தலுக்கு கட்சியைத் தயார்ப்படுத்த முனைவார் மஹிந்த. ஆனால், இப்போதுள்ள நிலைமையை பார்த்தால் ராஜபக்ஷ தரப்பு மீண்டும் அரசியலில் கோலோச்ச பல தசாப்தங்கள் பிடிக்கும். மஹிந்த கட்டிய அரசியல் சாம்ராஜ்யம் சரியுமா, தாக்குப்பிடிக்குமா என்பது இவ்வாரம் தெரியவரும்..!

- ஆர்.சிவராஜா -

நக்கல் நமசிவாயம்

இடைக்கால அரசாங்கம் அமைக்கிறது தலைவலிக்கு தலையணையை மாத்திறது போலத்தான்...! தலைவலி இருக்கத்தான் போகிறது...!

இன்றைய நாளில்...

★ 1920 – அஸர்பைஜான் சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
★ 1932 – மஞ்சள் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.
★ 1995 – பலாலியில் அமெரோ விமானம் வீழ்தலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதற்கு அடுத்த நாள் இன்னுமொரு விமானமும் வீழ்த்தப்பட்டது.
★ 2000 – இலங்கை இராணுவத்தினருக்கெதிரான விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
★ 2005 – ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

உணவுப்பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாம்!

தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பை உணவக உரிமையாளர்களுக்கு வழங்குவதாக அசேல சம்பத் தெரிவிப்பு

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக தேநீர் முதல் சகலவகையான உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பை உணவக உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதாக அனகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக உணவகங்கள் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களின் தொழிற்துறையை பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு உணவக உரிமையாளர்களுக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

எரிவாயுவினூடாக தனது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துவந்த பல்லாயிரக்கணக்கான உணவு உற்பத்தியாளர்களின் வாழ்க்கை பெரும் இக்கட்டான நிலையை சந்தித்துள்ளது. சிறியளவான உணவுகளை விற்பனைசெய்து வந்தவர்கள் உட்பட பெரும்பாலான உணவகங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

எரிவாயு விநியோகம் இன்மையினால் நாட்டிலுள்ள உணவகங்களில் 50 சதவீதமானவை முழுமையாக மூடப்பட்டுள்ளன. உணவு மற்றும் குடிபானங்களின் விலையை மேலும் அதிகரித்தால் உணவு உற்பத்தித்துறை மீள கட்டியெழுப்ப முடியாதளவுக்கு வீழ்ச்சியை சந்திக்கும். ஆயிரத்து 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சமையல் எரிவாயு இன்று 4 ஆயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளது. இந்த நிலை பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பை எம்மால் தீர்மானிக்க முடியாது. இதன் காரணமாக உணவுப்பொருட்களின் விலை தொடர்பிலான தீர்மானங்களை உணவக உரிமையாளர்களிடம் ஒப்படைக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. ஆனால், உணவுப்பொருட்களின் விலையை அதிகரிக்கவோ உணவகங்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நிலையோ இன்று இல்லை. காரணம் முழுமையான இந்தத் துறை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

வருமானத்திலிருந்து சேமிப்பை மேற்கொண்ட ஒருசில விற்பனையாளர்கள் நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் விலையை தீர்மானித்து உணவகங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

தேநீர் முதல் சகலவகையான உணவுப் பொருட்களின் விலைகளையும் தீர்மானிக்கும் உரிமையை உணவக உரிமையாளர்களிடம் ஒப்படைக்கிறோம். இந்த சகல உணவுப் பொருட்களுக்குமான விலை மேலும் அதிகரிக்கும். ஆனால், நூற்றுக்கு எத்தனை வீதத்தால் விலை அதிகரிக்குமென எம்மால் குறிப்பிட முடியாது.

உணவகங்கள் முழுமையாக மூடுவதற்கு முன்னர் இந்தத் துறையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டால் நிலைமை மேலும் தீவிரமடையலாம்.

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

27.04.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	130 611	141 6430
கனேடியன் டொலர்	153 8 61	164 6760
சீன யுவான் (renminbi)	40 4445	42 7 45
யூரோ	253 3152	265 3038
ஜப்பான் யென்	1 5544	1 66 6
சிங்கப்பூர் டொலர்	136 047	144 8275
ஸ்ரேலிங் பவுன்	316 6312	333 8267
சுவிஸ் பிராங்ங்	241 8 20	255 4103
ஐ.அ.டொலர்	226 7118	24 3861

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	785 1 22
குவைட்	குவைட் தினார்	0,0 3 86 5
ஓமான்	ஓமான் றியால்	766 54 8
கட்டார்	கட்டார் றியால்	81 5264
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	8 7 4
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	80 8833

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை

நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணியாளர்கள் மற்றும் அவர்களின் செயற்பாடுகள், நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள நிறை மேற்று மற்றும் பிரதம பொறியியல் அலுவலகங்கள், திட்டப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அது தொடர்பான சேவைப் பிரிவுகளின் தலைவர்களுடனான சந்திப்பு நேற்று (27) புதிய நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் சாலை வலையமைப்பு 'ஏ' மற்றும் 'பீ' வகுப்பு சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் வலையமைப்பை தேசிய சாலைகளாகவும், 'சீ' மற்றும் 'டி' வகுப்பு சாலைகள் மாகாண சாலைகளாகவும், வகைப்படுத்தப்படாத உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான சாலைகள் மற்றும் பல்வேறு அரச துறைகள் மற்றும் நிறுவனங்களால் பராமரிக்கப்படும் சாலைகளாகவும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டம் தொடர்பான வீதிகளாக அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.வீரகோன் விவசாய வீதிகள் மற்றும் நீர்ப்பாசன முறைக்கு உட்பட்ட வீதிகள் உட்பட முழு வீதி வலையமைப்பு தொடர்பிலும் விரிவான அறிமுகத்தை வழங்கினார். இந்த வீதிகளுக்கு அமைச்சு மற்றும் அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் எதிர்காலத்தில் இது எவ்வாறு முறையான முறையில் செயற்படுத்தப்படும் என்பது குறித்தும் அமைச்சருடன்

கலந்துரையாடப்பட்டது.

நாடு முழுவதும் இயங்கும் சாலைகளின் சேவை வழங்கல், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தங்களின் பங்களிப்பு குறித்து துறைத் தலைவர்கள் அமைச்சருக்கு தனித்தனியாக விளக்கினர். இதன்கீழ், கட்டுமானம், நிலம், சுற்றுச்சூழல், சட்டம், பராமரிப்பு மற்றும் மேலாண்மை, பயிற்சி, தொழில்நுட்பம், இயந்திரவியல், பாலம் கட்டுதல் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் துறையின் பங்கு குறித்து பிரிவுகளின் தலைவர்கள் விரிவாக விளக்கினர்.

நாட்டில் தற்போது செயற்படும் வீதிகள் மற்றும் பாலங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை மற்றும் எதிர்வரும் வருடத்தில் திட்டமிடப்பட்டுள்ள உத்தேச வீதி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

மக்கள் நலன் மற்றும் அவர்களின் நலன்களுக்கு அதிக முன்னுரிமை அளித்து, ஓர் அரசாங்கமாக நாட்டின் அபிவிருத்தியை தொடர்வதன் முக்கியத்துவத்தை அமைச்சர் வலியுறுத்தினார். தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நாட்டின் முன்னணி நிர்மான நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் சகல வசதிகளையும் வழங்கும் என அவர் தெரிவித்தார்.

உறுதியான மற்றும் முறையான பொறிமுறையின் ஊடாக வினைத்திறனான சேவையைப் பெறுவதற்கு தினைக்களத் தலைவர்கள் வழங்கிய நிபுணர்களின் ஆலோசனைகளை கருத்திற்கொள்ளும் வேலைத்திட்டத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியத்தையும் கட்டிக்காட்டிய அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒன்றிணைந்த முயற்சியை மேற்கொள்ளுமாறு அழைப்புவிடுத்தார்.

குறிப்பாக, ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கான முறையான வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்த அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முதன்மையான உட்கட்டமைப்புகளான சாலை மற்றும் பாலங்களின் மேம்பாட்டிற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும், தாமதங்களைக் குறைக்க புதிய உத்திகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்வில் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.எந்தராமசிறி, மேலதிக செயலாளர் பொறியியலாளர் கே.பி.வி.இந்திராரத்ன, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.வீரகோன் மற்றும் பணிப்பாளர் நாயகம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சியின் சுதந்திரத்திற்கான போராட்டத்தின் இரண்டாம் நாள் மாவனெல்லையில் ஆரம்பம்

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த "சுதந்திரத்திற்கான போராட்டம்" ஐக்கிய மக்கள் சக்தி பாதயாத்திரையின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாவின் தலைமையில் நேற்று (27) மாவனெல்லை நகரில் ஆரம்பமாகியது. இந்த பாதயாத்திரையில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

69 இலட்சம், 68 இலட்சம் வாக்குகளைக்கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் 145இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சகிதம் அதிகாரங்கள் மற்றும் 2/3 பெரும்பான்மையை கொடுத்து உருவாக்கிய அரசாங்கம், நாடு வீழ்ந்துள்ள நேரத்தில் அந்த மோசடியாளர்களுடன் எமக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இன்று உலக காக்கை தினம் என்பதோடு, பிற காக்கைகளால் ஊதிப்பெருத்த பங்கைப் பெற்ற பெரிய ராஜபக்ஷவின் பெருப்பு சூப் குடித்த குழுக்கள் தன் மீதும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் மல் செய்துகொண்டனர். நாட்டை சீரழித்த திருடர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியோ அத்தகைய மல் செய்யாது.

அரசாங்கத்துடன் நாங்கள் எப்படி (மல்) ஒப்பந்தம் செய்வது. இந்நாட்டு இளைஞர்கள், அரசியல் தலையீடு இன்றி இலட்சக்கணக்கானவர்கள், உயிர்களை தியாகம் செய்து காலிமுகத்திடலில் போராடும்போது இந்த திருடர்களுடன் நாம் ஒப்பந்தம் (மல்) செய்வோமா? என்ன ஒரு நகைச்சுவை? இவர்கள் கூறுவது, அரசாங்கத்திற்குள் இருக்கும் திருக்கடியையாகும்.

ஒரு பகுதியினர் ஜனாதிபதியை செல்லமாறு கூறுகின்றனர். மற்றொரு தரப்பினர் ஜனாதிபதியை பதவி விலக வேண்டாம் எனக் கூறுகின்றனர். இன்னும் சிலர் பிரதமரை பதவி விலக வேண்டாம் என்கிறார்கள். மற்றொரு தரப்பினர் பிரதமரை வெளியேறுமாறு கூறுகின்றனர்.

இந்த திருடர்களிடம் இருக்கும், மோசடிக்கு நாங்கள் ஆதரவளிக்காதபோது எங்களுக்கும் ஒப்பந்தம் (மல்) இருப்பதாகக் கூறுகின்றனர். எங்களுடைய மல் (ஒப்பந்தம்) இந்த நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களுடனே இருக்கின்றன. மாறாக, இந்தத் திருடர்களுடன் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

மருந்து தட்டுப்பாட்டுக்கு உடனடியாக தீர்வு பெற்றுக்கொடுக்குமாறும், மக்களின் உயிர்களை காப்பாற்றுமாறும் கோரி நேற்று (27) மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள் : கெலும் குணதிலக்க)

தாதியர் பயிற்சிகளுக்காக நூறு மலையக இளைஞர்களுக்கு புலமைப்பரிசில் உதவித்தொகை

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையிலும் எதிர்கால சுகீட்சத்தையும் கருத்திற்கொண்டு அவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்குவதில் கொழும்பிலுள்ள ஓசோ தனியார் பல்கலைக்கழகம் ஆர்வம் காட்டி வருகின்றது.

இந்தவகையில் மலையக மக்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு தாதியர் பயிற்சிகளை முடிப்பதற்காக கல வசதிகளுடனும் 100 மலையக இளைஞர்களுக்கு புலமைப்பரிசில் உதவித்தொகை, நிறுவனத்தின் தலைவர் விநாயகமூர்த்தி ஆக்காஸ் தலைமையில் அண்மையில் ஹற்றன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஹட்டன் நகர சபைத் தலைவர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மருதானை புனித ஜோசப் கல்லூரியில் தீப்பரவல்



கொழும்பு, மருதானை புனித ஜோசப் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நேற்று (27) தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. தீயணைப்புக்காக ஐந்து தீயணைப்பு வாகனங்களும் 18 அதிகாரிகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 12.25 மணியளவில் இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

தீயணைப்புப் படையினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த தீப்பரவலின் காரணமாக மாணவர்கள் அனைவரும் வகுப்புகளிலிருந்து வெளியேறி மைதானத்தில் இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

யாசகரின் தாக்குதலில் நபரொருவர் உயிரிழப்பு

பத்தரமுல்ல பிரதேசத்திலுள்ள சுப்பர் மார்க்கெட்டொன்றின் முன்னால் இருந்த யாசகரொருவரால் கூரிய ஆயுதத்தால் தக்கப்பட்டு நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் நேற்று முன்தினம் (26) இரவு குறித்த விற்பனை நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்ததன் பின்னர் வெளியில் வந்தபோது அங்கிருந்த யாசகரொருவருடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முரண்பாட்டு நிலை வலுவடைந்ததில், யாசகர் தான் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதத்தால் குறித்த நபரை தாக்கிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளாகி குறித்த விற்பனை நிலையத்துக்கு முன்னால் கீழே விழுந்த நபர் கொல்வத்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

மாலபே, பொதுஹர பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 57) நபரொருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரான யாசகர் இந்தச் சம்பவத்தின் பின்னர் தப்பிச் சென்றுள்ளதுடன் அவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள கொட்டகலையில் நீண்ட வரிசை

(க.கிஷாந்தன்)

கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் நேற்று (27) காத்திருந்தனர். நேற்றுக் காலையிலிருந்து விநியோகிக்கப்பட்ட மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதற்காக மதியம் பன்னிரெண்டு மணியையும் தாண்டி மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இதில் உணவக உரிமையாளர்கள், ஊழியர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என சமையல் மற்றும் தமது இதர தேவைகளுக்காக இவ்வாறு நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ளும் அதேவேளை, மின்வெட்டு மற்றும் எரிவாயு விலை உயர்வு காரணமாக வீட்டில் சமையலுக்காகவும் மின்வெட்டின்போது வீட்டின் வெளிச்சத்துக்காக விளக்கேற்றுவதற்காகவும் மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதாக காத்திருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், வரிசையில் காத்துக்கொண்டு நின்றுகொண்டிருக்க முடியாத நிலையில் தாங்கள் நின்ற இடத்திலேயே தரையில் அமர்ந்திருப் பதையும் காணக்கூடியதாக இருந்தது. எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்து மண்ணெண்ணெய் வாங்க பிரதான வீதியின் ஓரத்தில் சுமார் இரண்டு கிலோமீற்றர் வரை நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மண்ணெண்ணெய் வாங்க 5 மணி நேரம் காத்திருந்த வர்த்தகர் வீட்டில் உயிரிழப்பு

(க.கிஷாந்தன்)

வீட்டுக்குத் தேவையான மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 5 மணித்தியாலயங்களுக்கு மேல் நீண்ட வரிசையில் காத்திருந்த ஹட்டன் நகர வர்த்தகர் ஒருவர் நேற்று (27) அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹட்டன் - தும்புறுகிரிய வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தேவநாயகம் கிருஸ்ணசாமி (வயது 55) என தெரிய வந்துள்ளது.

ஹட்டன் நகரில் வாடகைக்கு கடை யொன்றை பெற்று வர்த்தகத்தில்ஈடுபடும் குறித்த நபர், நேற்றுமுன்தினம்(26) மாலை 5 மணியளவில் மண்ணெண்ணெயைப் பெறுவதற்காக எரிபொருள் நிலையத்துக்குச் சென்று, சுமார் இரவு 11 மணியளவில் வீட்டுக்கு வருகைதந்ததாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். மேலும் வீட்டுக்கு வந்த அவர், தனக்கு அதிகம் சோர்வாக இருப்பதாக தெரிவித்து, வாந்தியும் எடுத்துள்ளதுடன், பின்னர் நித்திரைக்குச் சென்றுள்ளார்.

அதிகாலை வேளையில் தனது கணவர் நித்திரையிலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவித் துள்ள அவரது மனைவி, இதற்கு முன்னர் தனது கணவருக்கு எவ்வித நோய்களும் இருக்கவில்லை என்றும் மண்ணெண்ணெய் பெறுவதற்காக பல மணிநேரம் காத்திருந்தமையாலேயே தனது கணவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியான நிஹால் அலஹகோன் புதிய கம்பளை வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதத்தை நேற்று (27) மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கண்டியிலுள்ள தமது காரியாலயத்தில் வைத்து கையளித்தார். (கண்டி நிருபர்)

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனம் மற்றும் பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை ஆகியவற்றின் நிதியொதுக்கீட்டில் நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட மட்டுக்கலை, பாமஸ்டன், கிறேட்வெஸ்டன் ஆகிய தோட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் தலைவர் என்.முரளிதரன் தலைமையில் சுமார் 3000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் நேற்று முன்தினம் (26) வழங்கப்பட்டன. (தலவாக்கலை நிருபர்)

அரசை கண்டித்து கெலிஓயா நகரில் ஆர்ப்பாட்டம்



(கம்பளை யோகர)

நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி அதிகரிப்பை கண்டித்தும் அரசை வீட்டுக்கு செல்லுமாறு கோரியும் கண்டி கெலிஓயா நகரில் நேற்று (27) ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது.கெலிஓயா நகரின் அனைத்து வியாபார நிலையங்களின் உரிமையாளர்களும் தங்களின் வர்த்தக நிலையங்களை மூடி ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கெலிஓயா பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டமானது நகரைச் சுற்றிலும் பதாகைகளையும் தேசிய கொடிகளையும் ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நுவரெலியாவில் இன்று ஆசிரியர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்க தீர்மானம்

(தலவாக்கலை நிருபர்)

ஆசிரியர் விடுதலை முன்னணி ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து இன்று (28) காலை நுவரெலியா நகரில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில், அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து இந்த மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைக்கு மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில், அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து இந்த மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமப்படுகின்றனர். இதனால் தூர இடங்களுக்கு சென்று பணிபுரியும் ஆசிரியர்கள் பலவேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். பஸ்களுக்கும் முச்சக்கர வண்டிகளுக்கும் அதிகளவில் பணத்தை செலவழித்து பாடசாலைக்கு செல்கின்றனர்.

இதனால் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, அரசு அதிபர், ஆசிரியர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து உடனடி தீர்வை வழங்க வேண்டும் என்பதற்காகவே இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் - என்றார்.

பொருளாதார மத்திய நிலையங்களுக்கு இன்று மரக்கறிகள் விநியோகிக்கப்படாது

பொருளாதார மத்திய நிலைய சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

(செ.திவாகரன்)

நாட்டிலுள்ள அனைத்து பொருளா தார மத்திய நிலையங்களுக்கும் இன்று (28) மரக்கறிகள் விநியோகிக் கப்படாதென அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலைய சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஜெட்டியாராச்சி தெரிவித்தார்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று (27) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள் உட்பட நாட்டு மக்கள் இனைந்து அரசாங்கத்திற்கு எதிராக இன்று (28ஆம் திகதி) போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கொழும்பு மெனிங் சந்தை உட்பட பல பொருளாதார நிலையங்களுக்கு அன்றைய தினம் மரக்கறிகளை அனுப்ப வேண்டாம் என விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் மரக்றி உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், குறித்த மரக்றி பறிக்கும் தொழிலாளர்கள் குறித்த தினத்தில் தொழிலுக்கும் வராததாலும் பொருளாதார நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் இந்த அரசாங்கம் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த விவசாயிகளையும் பாரிய இன்னல்களுக்குள்ளாக்கியது. பசளை இன்மை, கிருமிநாசினி போன்றவற்றின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியிருந்தனர் - என்றார்.

விவசாயத் திணைக்கள ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(செ.திவாகரன், பி.கேதீஷ்)

விவசாயத்திற்கான உரம் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றை தடையின்றி வழங்குமாறு கோரியும் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை, பொருட்களின் தொடர் விலையேற்றம், வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடியாக தற்போதைய அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரியும் நுவரெலியா விவசாயத் திணைக்கள ஊழியர்கள் மற்றும் நுவரெலியா விவசாயிகள் இணைந்து நேற்று (27) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா நகரசபை மண்டபத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது நுவரெலியா பிரதான அலுவலகத்திற்கு முன்பாக பேரணியாக வருகைதந்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நுவரெலியா லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 56 வருடங்கள் பூர்த்தி

(பி.கேதீஷ்)

நுவரெலியா லயன்ஸ் கழகம் ஆரம்பித்து 56 வருடங்கள் பூர்த்தி நிகழ்வுகள் நுவரெலியா கிறேன்ட் ஹோட்டலில் நுவரெலியா லயன்ஸ் கழகத் தலைவர் நீலியன் யோகேஷன் தலைமையில் நேற்று முன் தினம் (26) இரவு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் - 02 பிரிவு ஆளுநர் ரொஷான் காஞ்சனா யாப்பா, சிறப்பு அதிதிகளாக லயன்ஸ் 02 முதலாம் நிலை ஆளுநர் பேனட் கம்வத், இரண்டாம் நிலை ஆளுநர் ஸ்மித் ஹமீத் மற்றும் நுவரெலியா லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்களான சதீஸ்குமார், தெடுமாறன், பாலகிருஷ்ணன், வேலாயுதம், விஸ்வநாதன், மரியசூசை, மனோகரன், சிவாபால், குணசேகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்ப் பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும்

சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்பது எனது கருத்து - என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நாங்கள் கட்டாயம் ஆதரிக்க வேண்டும். ஜனாதிபதி அங்கு இருப்பதால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. ஆனால், அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்து வெளியேற்றுவதாக இருந்தால் அதற்கு பதிலாக யார் வரப்போகிறார்கள் என்ற கேள்வி உள்ளது. அதற்கு என்ன நடக்கப்போகின்றது என்பதை பார்த்துக்கொண்டே நடவடிக்கையில் இறங்கவேண்டும். நாட்டிலுள்ள ஸ்திரத்தன்மை இல்லாது போய்விட்டால் பொருளாதார ரீதியான மீள்கட்டுமானம் என்பது பாதிக்கப்படும். இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன என தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

தமிழ்க் கூட்டமைப்பு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் சலுகைகளைப் பெற்றிருந்தது. ஆனால், தமிழ் மக்களுக்கு இந்த சலுகைகள் கிடைக்கவில்லை. இவர்களை வெளியேற்றிவிட்டு யாரை நம்பப்போகின்றோம் என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பது எனது கருத்து.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுக்கப்பட்டால் அவருக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

ஜனாதிபதி என்பதில் அவர் செய்த பிழைகள் இருக்கின்றன. அதேபோல் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது செய்த பிழைகள் பல இருக்கின்றன. ஆனால், ஜனாதிபதி என்ற முறையில் அவர் செய்த பிழைகள் என்று எடுத்து பார்ப்போமானால், முதலாவதாக பதவிக்கு வந்தவுடன் 2019ஆம் ஆண்டு நாட்டுக்கு பெறவேண்டிய வரிகளை குறைத்து தனது ஆதரவாளர்களுக்கு நன்மையை கொடுக்கும் வண்ணம் பெருவாரியான வருமானத்தை இல்லாமல் செய்தது குற்றம்.

மக்களுடன் கலந்தாலோசிக்காமல் - நிபுணர்களுடன் கலந்தாலோசிக்காமல் உடனடியாக அமுல்படுத்திய உரத் தடை, நெருக்கடியை ஏற்படுத்தியது. இதன் காரணத்தினால் நெல் அறுவடை நன்றாக குறைந்திருக்கின்றது. வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஜனாதிபதி செய்த பலவிதமான நடவடிக்கைகள் நாட்டை சீரழிக்கும் வகையில் அமைந்தது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டுவந்தால் அதனை ஆதரிக்க வேண்டும். உண்மையும் இதுதான். அவரது கையாலாகாத்தனத்தினாலேயே நாடு மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது - என்றார்.

காட்டுப்புலம் அதிபர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு: பெற்றோர் கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ். நிருபர்)

யாழ். சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்யவேண்டாம் எனக் கூறி அந்த பாடசாலையின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று முன்தினம் (26) பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த அதிபர் பாடசாலைக்கு வந்தது தொடக்கம் அவர் மாணவர்களது நலன்கள் மீது காட்டுகின்ற அக்கறை, மாணவர்கள் மீதான அணுகுமுறை மற்றும் பாடசாலையின் தலைமைத்துவம் என்பன சிறப்பாக காணப்படுவதால் அவரை இடமாற்றம் செய்யவேண்டாம் எனக் கூறி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

அதிபர் சுய விருப்பத்தின்பேரில் இடமாற்றம் பெறுவதாக இருந்தால் பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இது தொடர்பில் வலயக்கல்விப் பணிமனைக்கு கடிதமொன்று கையளிக்கப்போவதாகவும் 5 நாட்களுக்குள் தகுந்த பதில் தராவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கப்போவதாகவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த அதிபர் பாடசாலைக்கு வந்த பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக மாணவர் ஒருவர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெருநாய்க்கடிக்குள்ளாகிய நபர் நீர்வெறுப்பு நோயால் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

தெருநாய்க்கடிக்குள்ளாகிய குடும்பத்தலைவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அவருக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்காது ஏற்பூசி மட்டும் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சபாரத்தினம் கனகலிங்கம் (வயது 50) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

பெப்ரவரி 16ஆம் திகதி குடும்பத்தலைவருக்கு தெருநாய் கடித்துள்ளது. அவர் மறுநாள் காலை பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சைபெறச் சென்றுள்ளார். அவருக்கு மருத்துவரின் ஆலோசனையில் ஏற்பு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் நேற்று திடீர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணிநேரங்களில் உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்த அமெரிக்கத் தூதுவர்

(யாழ். நிருபர்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் நேற்று முன்தினம் மாலை யாழ். மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியானுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

நாவாந்துறை வீதியில் அமைந்துள்ள மக்கள் பணிமனை அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கான காணி இல்லாத பிரச்சினை, காணி இருந்தும் வீட்டுத்திட்டம் இல்லாத பிரச்சினை, வாழ்வாதாரம் இல்லாத நிலை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முன்னர் உள்ள அரசாங்கமோ தற்போதுள்ள அரசாங்கமோ கருத்திற் கொள்ளவில்லை. இது தொடர்பாக முஸ்லிம் வாழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம் என யாழ். முஸ்லிம் மாவட்ட மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி எஸ்.ஏ.சுபியான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு இரண்டு கணினிகள் வழங்கிவைப்பு

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தால் நேற்று (27) தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்திற்கு இரண்டு கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் கந்தசாமி, செயலாளர் பாலச்சந்திரன், கழகத்தின் தாய்ச் சங்க செயலாளர் அற்புதசீலன் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டு கணினிகளை வழங்கினர்.

கல்வி வலயத்தின் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்திற்கு 80 கணினிகள் தேவையாக உள்ள நிலையில், அதன் தேவைப்பாட்டை அறிந்த தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் இரண்டு கணினிகளை வழங்கி மத்திய நிலைய செயற்பாட்டினை ஆரம்பிக்க வழிவகுத்துள்ளனர்.

(யாழ். நிருபர்)

கனடா வாழ் தமிழ் எழுத்தாளர் அருண் செல்லப்பா அண்மையில் தனது தாய் மண்ணாகிய அச்சுவேலிக்கு வருகைதந்து 'நினைத்தாலே இனிக்கும்', 'அவளுக்கு என்று ஒரு மனம்', 'சொல்லத்தான் நினைக்கிறேன்' என மூன்று நாவல்களை வெளியிட்டார்.

நூல்களை அம்பாறை மாவட்ட இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் இராமகிருஷ்ணன் செல்லத்துரை வெளியிட்டு வைத்ததுடன், நூலாசிரியர் உள்ளிட்ட விருந்தினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

மரக்கறி செய்கைத் திட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையில் மரக்கறி செய்கைத் திட்டம் நேற்று (27) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் கலந்துகொண்டு முதற்கட்டமாக நூறு மரக்கறி பைக்கற்றுகளை வழங்கினர்.

மரக்கறி பயிர் வகைகள் பாடசாலையில் வைத்து மாணவர்களால் பராமரிக்கப்பட்டு பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் கந்தசாமி, சங்கத்தின் செயலாளர் பாலச்சந்திரன், பாடசாலையின் முன்னாள் அதிபர் க.கைலாயபிள்ளை, தென்மராட்சி அபிவிருத்திக் கழக தாய்ச் சங்க செயலாளர் பொ.அற்புதசீலன், கழக உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

முன்பள்ளி மாணவர்களின் திறன்விருத்தியில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் பாதைத் திட்டம்

(யாழ். நிருபர்)

மாற்றத்திற்கான பாதைத் திட்டத்தில் முன்பள்ளி மாணவர்களின் திறன் விருத்தியுடன் நடத்தை மாற்றங்கள் சாதகமாக அமையப் பெறவேண்டும் என்ற நோக்குடன் முதற்சுற்று பயற்சிகள் முடிவடைந்து இரண்டாம் சுற்று பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.சேதுராஜா தெரிவித்தார்.

மாற்றத்திற்கான பாதை திட்டம் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்திற்கான பாதை திட்டமானது யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 2020ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து சொண்ட் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் 44 பாடசாலைகள், 20 சிறுவர் இல்லங்கள் மற்றும் 30 சிறுவர் கழகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென 156 ஆசிரியர்களும் 44 தொண்டர்களும் பயிற்றப்பட்டுள்ளனர்.

இது ஹொங்கொங் நாட்டில் பொலிடெக்னிக் பல்கலைக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடத்திட்டமாகும்.

இது வளரிளம் பருவத்தினருக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்டு ஹொங்கொங் நாட்டில் பாரிய வெற்றியடைந்த ஒரு திட்டமாகும். இதனை எங்கள் நாட்டின் கலாசாரத்திற்கேற்ப மாற்றியமைத்து வளரிளம் பருவத்தினருக்கு மாற்றத்திற்கான பாதை திட்டம் என்ற கருப்பொருளில் 8 அத்தியாயங்கள், 20 அலகுகள் 7000 மாணவர்களுக்கு வெற்றிகரமாக ஆசிரியர்களால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும், இக்கருப்பொருளை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் அறிமுகம் செய்யும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 கோட்டங்களில் 435 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது, முன்பள்ளி மாணவர்களின் திறன்விருத்தியுடன் நடத்தை மாற்றங்கள் சாதகமாக அமையப் பெறவேண்டும் என்ற நோக்குடன் முதற்சுற்று பயற்சிகள் முடிவடைந்தன. இரண்டாம் சுற்று பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் ஏராளமான மாற்றங்கள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகத்தினரால் அடையாளம் காணப்பட்டு அறிக்கையாக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க மாற்றமாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல், பாடசாலைகளுக்கு நேரத்திற்கு சமுகமளித்தல், வரிசையாக பாடங்களுக்கு செல்லுதல், சீராக சீருடைகளை அணிந்து வருதல், பாடவேளையில் குழப்பம் மேற்கொண்ட மாணவர்கள் இப்பயிற்சியின் பின் அமைதியாக இருத்தல், பாடசாலைக்கு ஒழுங்காக சமுகமளித்தல், மாணவர்களுக்கு ஏற்படுகின்ற சவால்களை எவ்வாறு இலகுவாக வெற்றிகொள்ள முடியும் போன்றவை ஆசிரியர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இப்பயிற்சியை பெற்ற ஆசிரியர்கள் தங்களுக்குள்ளேயே பாரியளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இத்தகைய நடத்தை மாற்றங்கள் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் என்பதிலும் நடைபெறுகின்ற வன்முறைகள், இளம் வயது தற்கொலைகள், பாடசாலை இடைவிலகல், போதைவஸ்து பாவனை போன்றவை இடம்பெறாது, பொறுப்புமிக்க இளம் சமுதாயத்தை உருவாக்குவதில் இத்திட்டம் பங்காற்றுகிறது. இத்திட்டம் முடிவுறும் நிலையில் உள்ளது. இதனை சகல பாடசாலைகளிலும் செயற்படுத்தி சமூகம் முழுவதும் பயனுறும் வகையில் ஒழுங்கமைப்பது அனைவரதும் கடமையாகும் - என்றார்.

திகதி 26.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4744
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.12,399,020.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 8 1 1 2 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,896,043.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 774
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,003,040.00
வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 07 14 27 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,870,127.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0053
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,717,460.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 06 36 37 48
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,957,522.40

கோடி 24+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1092
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,840,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.249,084,154.00
J 01 08 35 46 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

சாராவை தேடி மூன்றாவது தடவையாக மரபணு பரிசோதனை; சாய்ந்தமருதில் இறந்தோரின் சடலங்கள் மீள தோண்டியெடுப்பு

(பாறுக் ஷிஹான்)

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை தாக்குதலைத் தொடர்ந்து அம்பாறை சாய்ந்தமருது பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் டி.என்.ஏ. பரிசோதனைக்காக நேற்று (27) காலை அம்பாறை புத்தங்கல பொது மயானத்தில் தோண்டியெடுக்கப்பட்டது.

மூன்றாவது தடவையாக மேற்கொள்ளப் படவுள்ள இப்பிரேத பரிசோதனையானது அம்பாறை பிரதான மாவட்ட நீதிபதி லுசாகா குமாரி தர்மகீர்த்தி முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரிகளான என்.டபிள்யூ.யு.தினுகா மதுசானி மற்றும் ருச்சிர நதீர ஆகியோருடன் இரசாயன பகுப்பாய்வாளர் வனிதா பண்டாரநாயக்க தடயவியல் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பிரசன்னத்துடன் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரியின் மனைவி புலஸ்தினி மகேந்திரன் (சாரா ஜெஸ்மின்) என்பவர் தொடர்பான டி.என்.ஏ. பரிசோதனைக்காக சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். அத்துடன், சம்பவ இடத்திற்கு அருகில் ஊடக அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் ஈஸ்டர் தொடர் தாக்குதல்களின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹாசீமின் சகோதரரால் 26.04.2019 இரவு சாய்ந்தமருது பகுதியிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஈஸ்டர் தொடர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் சாரா ஜஸ்மின் இறந்ததாக இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சாரா தொடர்பான மர்மங்கள் நீடித்து வரும் நிலையில் அவர் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சாராவை அடையாளம் காண உடல் உறுப்புகள் டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது இது மூன்றாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களென வெளியிடப்பட்ட பெயர்களின் விவரங்கள் பின்வருமாறு: முஹமட் ஹாசீம் முஹமட் றில்வான் (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் சகோதரர்), முஹமட் நஸார் பாத்திமா நப்னா (முஹமட் ஹாசீம் முஹமட் றில்வானின் மனைவி), முஹமட் ஹாசீம் முஹமட் ஜெய்னி/முஹமட் சின்னா மௌலவி (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் சகோதரர்), ஆதம்லெப்பை பாத்திமா அப்ரீன் (முஹமட் ஹாசீம் முஹமட் ஜெய்னியின் மனைவி), ஹயாது முஹமட் ஹாசீம் (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் தந்தை), அப்துல் சத்தார் சித்தி உம்மா (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் தாய்), முஹமட் ஹாசீம் ஹிதாயா (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் சகோதரி), இப்றாகிம்லெப்பை முஹமட் நிசாட் (முஹமட் ஹாசீம் முஹமட் றில்வானின் மைத்துனரும் முஹமட் ஹாசீம் ஹிதாயாவின் கணவரும்), அப்துல் ரஹீம் பிரோஸா (சியோன் தேவாலய தற்கொலை குண்டுதாரி ஆசாத்தின் மனைவி), மகேந்திரன் புலஸ்தினி/சாரா ஜெஸ்மி (நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய தேவாலய தற்கொலை குண்டுதாரி முஹமட் ஹஸ்தூன் என்பவரின் மனைவி), அகமதுலெப்பை முஹமட் நியாஸ் (தேசிய தௌஹீத் ஜமாத் பிரதான உறுப்பினர்), முகமட் றில்வான் மீரா (முஹமட் ஹாசீம் முஹமட் றில்வானின் மகள்), முஹமட் றில்வான் மருவான் சஹீட் (முஹமட் ஹாசீம் முஹமட் றில்வானின் மகன்), முஹமட் ஜெய்னி அமாயா (முஹமட் ஹாசீம் முஹமட் ஜெய்னியின் மகள்), முஹமட் இமாம் ஹாசிம் (முஹமட் ஹாசீம் முஹமட் ஜெய்னியின் மகன்), முஹமட் சஹ்ரான் வாசீட் (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் மகன்) மற்றுமொரு சடலம் இனங்காணப்படவில்லை.

இது தவிர, இந்தத் தாக்குதலில் காயமடைந் தவர்கள் முஹமட் சஹ்ரான் ருசைதா (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் மகள்), அப்துல் காதர் பாத்திமா ஹாதியா/சித்தியா (முஹமட் ஹாசீம் முஹமட் சஹ்ரானின் மனைவி) சாய்ந்தமருது தற்கொலை தாக்குதல் இடம்பெற்று கடந்த 26.04.2022 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

இதன்போது கொல்லப்பட்டதாக கூறப்படும் 17 பேரின் உடற்பாகங்களையும் குடும்ப உறுப்பினர்களின் மரபணு பரிசோதனை அறிக்கைகளைக்கொண்டு பகுப்பாய்வு செய்ததில் சந்தேகத்திற்கிடமாக தேடப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்பவரின் மரபணு பரிசோதனை அறிக்கை பொருந்தவில்லை என தெரிவிக்கப்பட்டதையடுத்து சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரனின் மரபணு பரிசோதனை அறிக்கையை அறிய மீண்டும் சாரா என்ற புலஸ்தினி தப்பிச் சென்றுள்ளாரா என சந்தேகம் எழுப்பப்பட்டு சர்ச்சைகள் நாளுக்கு நாள் நீடிக்கின்றன.

கடந்த உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் ஏப்ரல் 21 நடைபெற்ற பின்னர் அம்பாறை மாவட்டத்திலுள்ள சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம பகுதியில் மேற்படி தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இதன்போது குறித்த பகுதி வீடு ஒன்றில் வாடகைக்கு குடியிருந்த சஹ்ரான் ஹாசீமின் சகோதரர் உட்பட பலரும் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் சஹ்ரான் ஹாசீமின் மனைவி உட்பட அவரது மகள் உயிருடன் இராணுவத்தினரால் மீட்கப்பட்டிருந்தனர்.

சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்ற இடங்களில் அந்நிய செலாவணி மையங்களை அமைக்குக!

அரச வங்கிகளிடம் கிழக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

(கிண்ணியா நிருபர்)

சுற்றுலாத்துறையின் ஊடாக நாட்டுக்கு அந்நிய செலாவணியை அரச வங்கிகள் ஊடாக ஈர்ப்பதற்கான துரித ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை ஆரம்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அண்மையில் அரச வங்கிகளின் மாகாண பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மாகாணத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் இடங்களில் அந்நிய செலாவணி மையங்களை அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் கூறினார். இதன்மூலம் வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களில் சட்டவிரோதமான பரிவர்த் தனைகள் குறையும் என்றும் அவர் கூறினார்.

மேலும், வெளிநாட்டு நாணயங்களை அரச வங்கிகள் ஊடாக மாற்றுவதற்கான பொது அறிவிப்புப் பலகைகளை அமைக்குமாறும் ஆளுநர் இதன்போது பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் அரச வங்கிகள் ஊடாக மக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு வழிகளை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் ஆளுநர் மேலும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க மற்றும் திருகோணமலையிலுள்ள அரச வங்கிகளின் மாகாண அலுவலகங்களின் முகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.

அழிந்துவரும் விவசாயத்தை உயிர்ப்பிக்கக் கோரி சம்மாந்துறை நீர்ப்பாசன காரியாலய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம்

(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம்.நாஸிம்)

நாட்டின் பெருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்வாதாரம், அன்றாட ஜீவனோபாயம் கஷ்டத்திற்குள்ளான நிலையில், தற்போதிருக்கும் அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராகவும், ஆதாரவாகவும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன காரியாலய பொறியியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் தலைமையில் பல்வேறு சுலோகங்களை கையில் ஏந்திக்கொண்டு விவசாயிகளின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (27) நண்பகல் மதிய போசன நேரத்தில் அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன காரியாலய முன்றலில் இடம்பெற்றது.

இந்தக் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஆட்சியாளர்களே இதை கேளுங்கள். இப்பயாவது நாட்டைப் பற்றி சிந்தியுங்கள், பஞ்சம், கைஅருகில் விளங்கிக்கொண்டு வேலை செய்யுங்கள், நீர்ப்பாசனக் குடும்பம் - நாங்கள் எல்லோரும் அழுத்தம் தாறம் அரசாங்கத்திற்கு பசளை கொடுங்கள். விவசாயிகளுக்கு இந்தப் போகம் சிறந்து விளங்க விளைச்சல் இல்லை, வயலுக்கு பசளை இல்லை, பசளை இல்லாமல் சாப்பிட அரிசி இல்லை, அரிசி வாங்க டொலருமில்லை, தண்ணீர் கொடுக்க நாங்கள் ரெடி. பசளை இல்லாமல் ஏலாண்டு சொல்றாங்க. விவசாயிகள் வேலை நிறுத்தம் வயல் எல்லாம் காடாகுது, பரகும்பா அரசன் அன்று சோறு கொடுத்தான் இடைவிடாது, அப்படியான நாட்டில் பிறந்தவர்கள் நாங்கள் இன்று றோட்டில் பட்டினியோடு, பஞ்சத்தை நாட்டில் உண்டாக்கிட்டு பிச்சை எடுக்கிறோம். உலகமெல்லாம் பைத்தியம் ஆடுறம். எல்லாப்பக்கமும் நாங்கள். எல்லாம் நாகத்தின் வாயில், வயல் வேலைக்கு டீசல் இல்லை. விலையும் நல்லா ஏறிப் போகுது. டீசல் போலினுக்கு குறையும் இல்லை அரசாங்கத்திற்கு கணக்கே இல்லை என்று பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

மட்டக்களப்பில் ஒரே வாரத்தில் 24 பேருக்கு டெங்கு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 22ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 24 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தவாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 நோயாளர்களும், ஏறாவூர், கோரளைப்பற்று மத்தி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 05 நோயாளர்களும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 நோயாளர்களும், செங்கலடி, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி மற்றும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளருமாக

மொத்தம் 24 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இருப்பினும் கத்தான்குடி, வாழைச்சேனை, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை மற்றும் ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரை 307 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும் இதுவரை எவரும் மரணமடையவில்லை எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர்தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம்கொடுக்காத வகையில் சூழலை துப்புரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கிண்ணியா உலமா சபையில் சர்வமத இப்தார் நிகழ்வு

(சீனக்குடா நிருபர்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கிண்ணியா கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று (27) கிண்ணியா ஜம்மியத்துல் உலமா சபை காரியாலயத்தில் நடைபெற்றது.

கிண்ணியா உலமா சபை தலைவர் மௌலவி அஷ்ஷெஹ் ஏ.எம்.ஹிதாயத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திணைக்களத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கிண்ணியா உலமா சபைத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

மனிதர்களுக்கு இறை அச்சம் ஏற்படவேண்டும் என அல்-குர்ஆன் கூறுகின்றது. அதனூடாகவே உள்ளத்தில் மாற்றம் ஏற்பட்டு நாட்டையும் மனித சமூகத்தையும் நேசிக்கக்கூடிய உலகை நாம் காணமுடியும். இதற்காகத்தான் இந்த நோன்பு விதியாக்கப்பட்டது. தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு கஷ்டமான நிலையில் மனிதநேயத்தோடு மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு இந்த மாதத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சீனக்குடா ஸ்ரீ போதிராஜ விகாராதிபதியும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றிய ஆலோசகருமான அலுத் ஓய சத்தா திஸ்ய

கருத்துத் தெரிவிக்கையில்,

நோன்பு என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் மிகவும் புனிதமான ஒரு கடமையாக இருக்கின்றது. இந்த நோன்பு மனிதனை பாவங்களிலிருந்து பாதுகாப்பதற்கு சக்தியை அளிக்கின்றது. அத்தோடு அதிகளவான தர்மங்களை செய்வதற்கு இது வழிகாட்டுகின்றது. இவ்வாறான இப்தார் நிகழ்வு நோன்பாளிக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக இன்று கண்டு கொண்டேன்.

நபியின் வாழ்க்கை முறை இன ஐக்கியத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சமயங்கள் அனைத்தும் மனிதனுக்கு நேர்வழி காட்ட வந்தவையாகும். சமயங்கள் தோன்றியதன் உண்மையான அர்த்தங்களை மனிதன் உணர்வுபூர்வமாக அறிந்துகொள்ளும்போதுதான் சமூகங்களுக்கிடையே சகவாழ்வும் சமாதானமும் உருவாகும் - என்றார்.

உப்புவெளி குருமட அதிபரும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றிய ஆலோசகருமான அருட்தந்தை எஸ்.எஸ்.ஜோன்பிள்ளை கருத்து தெரிவிக்கும் போது,

அயலவர்களின் உணர்வுகளையும் தேவைகளையும் பிறர் அறிந்துகொள்வதற்கு சிறந்த ஒரு மாதமாக ரமழான் இருக்கின்றது. இந்த மாதம் சிறப்பான சமூக கட்டமைப்பு ஒன்று உருவாவதற்கு துணை செய்கின்றது. எனது துறைசார் கற்கையின்போது இஸ்லாமிய மார்க்கத்தைத்தான் நான் அதிகம் விரும்பிப் படித்திருக்கிறேன். மிக மோசமான யுத்த சூழ்நிலையின்போது, எனது வாழ்வின் பெரும்பகுதியை இஸ்லாமியர்களோடு கழித்திருக்கிறேன். அதனால் நான் முஸ்லிம்களில் பண்பாடு, பழக்கவழக்கங்களை நன்கறிவேன். இஸ்லாமியர்களின் வாழ்க்கை முறை மார்க்கத்தோடு இணைந்து இருப்பதை அவதானித்திருக்கிறேன். மனிதன் பரிசுத்தமாவதற்கு ரமழான் மாதம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும் - என்றார்.

திருகோணமலை கோணேஸ்வர ஆலய பிரதம குருவும் திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களின் ஒன்றிய தலைவருமான இராஜகந்த பத்மநாதன் குருக்கள் இங்கு கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தி, அவற்றை மேம்படுத்து வதற்காக பௌத்த, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மதத் தலைவர்களோடு சேர்ந்து பல வருட காலமாக பணியாற்றிக்கொண்டிருக்கின்றேன். இந்த பயணத்தில் இஸ்லாமிய உலமாக்களின் பங்களிப்பு என்னை மிகவும் பெருமிதமடையச் செய்திருக்கிறது. குறிப்பாக, எமது சங்கத்தின் செயலாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற ஹதியதுள்ளா மௌலவியை இங்கு நான் குறிப்பிடவேண்டியிருக்கின்றது.

சகோதர சகவாழ்வின் முக்கியத்துவத்தைப் பற்றி இஸ்லாம் அதிகமாக போதிக்கின்றது. இதற்கு ரமழான் மாதம் சிறந்த உதாரணமாகும். எல்லா மதங்களும் இதைத்தான் விரும்புகின்றன. மனிதன் அடையப்போகும் இலக்கு ஒன்றுதான். ஆனால், அதை அடைவதற்கு அவன் தெரிவுசெய்த வழிகள்தான் பலவிதம். இதன் காரணமாகத்தான் உலகில் பல சமயங்கள் தோன்றி இருக்கின்றன என்றார்.

இந்நிகழ்வின் இறுதி அம்சமாக நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் நீங்கி, நாட்டு மக்களின் எதிர்கால சுபீட்சத்துக்காக பிரார்த்தனை இடம்பெற்றது. இதனை திருகோணமலை மாவட்ட ஐக்கிய சமயங்களில் ஒன்றிய செயலாளர் அஷ்ஷெஹ் எம்.வை.ஹதியதுல்லாஹ் நடத்திவைத்தார்.

திருக்கோவில் சாகாமம் குளத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாமம் குளத்தில் அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (26) பகல் மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வேளாண்மை பயிர்ச் செய்கைக்கு சென்ற விவசாயிகள் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதை நேற்று பகல் கண்டதையடுத்து பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த குளத்தில் நீரில் மிதந்துகொண்டிருந்த ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்காக நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

புன்னக்குடா கடற்கரை பிரதேசத்தில் 255 ஏக்கர் நிலப்பரப்பில் புடைவைக் கைத்தொழில் வலயம்

முதலீட்டாளர்கள் குழுவொன்று கள விஜயம்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர், புன்னக்குடா கடற்கரையோரப் பிரதேசத்தில் அமைக்கப்படும் புடைவைக் கைத்தொழில் வலயத்தில் சுமார் 4000 தொடக்கம் 5000 பேருக்கு தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், உற்பத்திகள் மூலமாக முதல் கட்டத்திலேயே சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேமிக்க முடியுமென இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் ராஜா எதிர்சூரிய தெரிவித்தார்.

எமது நாட்டிலிருந்து ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றபோதிலும் புடைவைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்காக சுமார் 600 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஏறாவூர், புன்னக்குடா கடற்கரையோரப் பிரதேசத்தில் சுமார் 255 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் புடைவைக் கைத்தொழில் வலயத்திற்கு முதலீட்டாளர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் (26) விஜயம் செய்தது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தலைமையில் விஜயம் செய்த இக்குழுவினர் இங்கு அமைக்கப்பட்டுவரும் உட்கட்டுமான வசதிகளைப் பார்வையிட்டனர்.

இங்கு முதலீடு செய்யவுள்ள நிறுவனங்களுக்கான உள்ளக வீதிகள், மின்சாரம் மற்றும் தண்ணீர் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதுடன், கழிவுநீரை கடலில் கலக்கச்செய்வதற்கான சூழாய்களும் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை முதலீட்டுச் சபையின் உயரதிகாரிகள் பலர் இவ்விஜயத்தில் இணைந்திருந்தனர்.

முதலீட்டுச் சபையின் தலைவர் இங்கு மேலும் கூறுகையில், கடந்த இரண்டு வருடகாலமாக இங்கு நடைபெற்றுவரும் உட்கட்டமைப்புப் பணிகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவுசெய்யப்படும். அதையடுத்து ஒப்பந்தம் செய்யப்பட்டு தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படும். சுமார் ஆறு நிறுவனங்களுக்கு இங்கு முதலீடு செய்வதற்கான இடவசதி வழங்கப்படும் - என்றார்.

காரைதீவு பிரதேச கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(மட்டக்களப்பு நிருபர்)

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் முகமாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (26) காரைதீவு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி, கடல்சார் திணைக்கள அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேச சபை செயலாளர், தொழிற்நுட்ப உத்தியோகத்தர், விடயத்திற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர், வேலை மேற்பார்வையாளர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கரையோரச் சுத்தம் சம்பந்தமாகப் பல விடயங்கள் ஆராயப்பட்டன. குறிப்பாக, கரையோரப் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் குறித்தும் அவற்றை தடுக்கும் முகமான விடயங்கள் குறித்தும் தவிசாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் முக்கியமாகக் கலந்துகொண்டிருக்கவேண்டிய சுற்றுச்சூழல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பன அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் கலந்துகொள்ளாமையினால் பல விடயங்களை செயற்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும், அனைத்து துறைசார்ந்த அதிகாரிகளும் இவ்விடயங்கள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டு சுற்றுச் சூழலையும், இயற்கை வளங்களையும் பாதுகாத்து, வளமான காரைதீவு பிரதேசத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் தவிசாளரினால் மேலும் கட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மாநகர சபையின் 2022க்கான 49ஆவது அமர்வு

(அம்பாறை நிருபர்)

கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான 49ஆவது சபை அமர்வு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் (26) மாலை இடம்பெற்ற இச்சபை அமர்வின்போது முதலில் சமய ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து கடந்த 2022.03.23ஆம் திகதி கூட்டறிக்கையை உறுதிப்படுத்தல், முதல்வரின் உரை, நிலையியற் குழுக் கூட்டத் தீர்மானங்களை சமர்ப்பித்தல் என்பன நடைபெற்றன.

அத்துடன், உறுப்பினர்களான மீராசாகிப் அப்துல் றகீம் மற்றும் அப்துல் ரஹ்மான் அமீர் ஆகியோரினால் பிரேரணைகள் முன்மொழியப்பட்ட பின்னர் முதல்வரின் ஏனைய அறிவுறுத்தலுடன் கூட்டம் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் சட்டவிரோதமாக கட்டட நிர்மாணம்

கண்டுகொள்ளாத மாநகர சபை

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடி பிரதேசங்களில் கல்முனை மாநகர சபையின் அனுமதி பெறப்படாமல் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் வீதிகளையும் ஒழுங்குகளையும் ஆக்கிரமித்து நிர்மாணிக்கப்படும் இப்புதிய கட்டட நிர்மாணங்களால் வீதிகள் ஒடுக்கப்பட்டு பொதுமக்களும் வாகனங்களும் பயணிப்பதற்கு மிகவும் சிரமத்தை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

சில கட்டடங்கள் மின்சும்பம் மற்றும் தொலைபேசி சும்பம் நடப்பட்டிருக்கும் எல்லையையும் தாண்டி நிர்மாணிக்கப்படுகின்றன. சிலர் தொலைபேசிக் சும்பத்தையும் மின்சும்பத்தையும் வைத்தே வீடு கட்டியுள்ளனர்.

வீடுக்கு படி கட்டி, படிக்கு மதில் கட்டி, வடிகான்களுக்கு மேலால் வீட்டின் எல்லை மீறி வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக கவரின் கதவை வீதிப்பக்கமாக திறந்தும் வைத்துள்ளனர்.

கட்டட நிர்மாணப் பொருட்களும் வீட்டு இடிபாடுகளும் பல மாதங்களாக வீதியில் குவிந்து காணப்படுவதால் அடிக்கடி வீதி விபத்துகளும் ஏற்படுகின்றன. இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் பெரிய வீதிகள் ஒடுங்கி ஒடையாவதனை எவராலும் தடுக்க முடியாது.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட புனித இப்தார் நிகழ்வையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (நற்பிட்டிமுனை நிருபர்)

மருதமுனை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு

(பெரியநீலாவணை, மருதமுனை மத்திய நிருபர்கள்)

மருதமுனை வாப்பா முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் ஏற்பாடுசெய்த வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் மருதமுனை அல் - மதீனா வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.எம்.ராஸிக் தலைமையில் நடைபெற்றது.

இந்த இப்தார் விசேட நிகழ்வுக்கு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்துகொண்டு, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் முச்சக்கரவண்டி சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரையாற்றினார். எதிர்காலத்தில் முச்சக்கரவண்டி சாரதிகளின் தேவைகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுசென்று சலுகை அடிப்படையில் எரிபொருள் மற்றும் இதர தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி எம்.ஐ.றைகல் ஹாதி, ஆலோசகர் மௌலவி எம்.எச்.ஜெலில் (ஹாமி), தலைமை கூட்டுறவு உத்தியோகத்தர் ஏ.எம்.ஸாபி சங்கத்தின் பொருளாளர் வை.எல்.எம்.பாறுக், செயலாளர் ஜே.எம்.கபீர் உட்பட முச்சக்கரவண்டி சாரதிகள் இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது விசேட மார்க்க சொற்பொழிவை மௌலவி என்.ஜி.அப்துல் கமால் நிகழ்த்தினார்.

கிழக்கு செய்திகள்

easttamilan@gmail.com

போடியார் புலம்பல்!



சஜீத் தாம் ஆட்சிக்கு வந்தால் 13, ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் எண்டு வயால வடை சுடுறாரு எலுவா?

அடே தம்பி நீ எப்படா ஆட்சியமைக்கிற இது இந்த நாளைல சரிவருமோ வராதோ தெரியாது..!

13, வாய்பாட உட்டுத்து எங்களுக்கு சமஷ்டி தீர்வு வேண்டும் எண்டுதாண்டா கொப்பருட காலத்துக்கு முதல் இருந்து நாங்க போராடி வாறம் அத தர ஒள்ளுப்பம் உதவு தம்பி!

சம்மாந்துறையில் தெரிவுசெய்யப்பட்டோருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

(கல்முனை நிருபர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு றிஸ்லி முஸ்தபா கல்வி மற்றும் சமூக நல உதவித்திட்ட அமைப்பின் பங்களிப்புடன் மாயோன் ஸ்டார் மைப் அமையத்துடன் இணைந்து உலருணவுப் பொதிகள் வழங்கும் நிழ்வு சம்மாந்துறையில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் நோன்புப் பெருநாளை சிறப்பாக கொண்டாடும் முகமாக இவ் உலருணவுப் பொதிகள் மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபாவினால் இவ் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாயோன் ஸ்டார் மைப் அமைப்பின் தலைவர் எம்.எம்.ரபீக், அமைப்பின் பெண்கள் பிரிவு தலைவி எம்.எம்.பாயிஸா உட்பட அமைப்பின் சம்மாந்துறை பொறுப்பாளர்களான எ.எம்.பாரிஸ், ஷபி லைஸித் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் றிஸ்லி முஸ்தபா கல்வி மற்றும் சமூக நல

அமைப்பின் பங்களிப்புடன் பலவேறு சமூக நல உதவி வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் திறைசேரிக்கு முறையாக கிடைக்க வேண்டும்

கோப் குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்து

அரச நிறுவனங்களின் வருடாந்த வருமானம் அரச திறைசேரிக்கு உரிய முறையில் கிடைக்கப்பெற வேண்டுமென கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2021ஆம் ஆண்டில் செயற்பாட்டு இலாபமாக 1.4 பில்லியன் ரூபா(1,496,155,864) ஈட்டியிருந்தாலும், 100 மில்லியன் ரூபா மாத்திரமே அரச திறைசேரிக்கு மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் கோப் குழு விசேட கவனம் செலுத்தியது. இதன்போது கோப் குழுவின் தலைவர் குறிப்பிடுகையில், அரச நிறுவனங்கள் தமது வருமானத்தில் கணிசமான பகுதியை அரச திறைசேரிக்கு அனுப்புவதற்கு தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதன் செயற்றிறன் தொடர்பில் மதிப்பீடு செய்வதற்காக அன்மையில் கோப் குழு கூடியபோதே குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி வெலிகம்பொல ஹைன்போர்ட் தோட்டத்தில் இருந்து அகற்றுவதற்காக 28 ஆயிரத்து 958 பைன் மரங்கள் 2020 ஜூன் 30 ஆம் திகதிவரைப் பாதுகாப்புத் தினைக்களத்தினால் அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டபோதிலும் இதுவரை அந்த மரங்கள் அகற்றப்படவில்லை என்பது தொடர்பில் கோப் குழு கவனம் செலுத்தியது. இவ்வாறு வனப் பாதுகாப்புத் தினைக்களத்தினால் அகற்றுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள மரங்களை செயற்றிறனாக அகற்றி ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமானால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு பாரிய இலாபம் ஈட்ட முடியும் என குழுவின் உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

இறக்குமதி செய்யப்படும் மரங்களுக்கு சான்றிதழொன்றை வழங்க அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரமளிக்கும் வகையில் கூட்டுத்தாபனச் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்குமாறு 2012 ஒக்டோபர் 10 இல் இடம்பெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் அறிவித்திருந்தாலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது. அதற்குப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிடுகையில், தளபாடங்கள் தயாரிக்கும் போது பாரியளவிலான மரங்கள் வியமாவது இதற்கான காரணமாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், அகற்றப்படும் மரங்கள் மூலம் துணை உற்பத்திகளைத் தயாரிப்பதன் ஊடாக இந்த நட்டத்தை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள முடியும் என தெரிவித்தார். தளபாட உற்பத்தி தொடர்பில் போதிய அறிவுடைய பணியாளர்கள் இல்லை என்பதாலும் சந்தையில் தனியார்த்துறையினருடன் போட்டியிட வேண்டிய நிலை உள்ளதாலும் இந்த நிலைமைக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனமாக தளபாடங்கள் உற்பத்தி செய்யாமல் இருப்பது பாரிய குறையாகும் என்பதால் இதனை நடத்திச் செல்கின்றமை இங்கு புலப்பட்டது. உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார். சுற்றுநிரூப அறிவுறுத்தல்களை மீறி கூட்டுத்தாபனத்தின் தலைவரின் உதவிக்கு இரண்டு ஆலோசகர்களும் சாரதி ஒருவரும் பணிப்பாளர் சபையின் அனுமதியில் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட ஆலோசகர்களுக்கு 2019 பெப்ரவரி 12 முதல் செப்டெம்பர் 03 வரை நாளொன்றுக்கு 2,850 ரூபா விகிதம் 270 நாட்களுக்கு 769,500 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதற்குத் திறைசேரியின் அனுமதியை கோரியிருந்தாலும் அது கிடைக்கப்பெறவில்லை என்பதால் உரிய தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் செயலாளருக்கு அறிவித்தார்.

சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மரக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த செயன்முறை 2012 முதல் இதுவரை தாமதமாவது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

14.4 மில்லியன் ரூபா கடனாளிகளை திறைசேரியின் அனுமதியின்றி தள்ளுபடி செய்தமை தொடர்பில் கோப் குழு வினவியது. நிறுவன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அனுமதியைப் பெற்று 2007இல் அப்போதைய பணிப்பாளர் சபையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்போது கோப் குழுவின் தலைவர் தெரிவிக்கையில், அரசாங்கக் கடன்கள் தொடர்பான ஒருங்கிணைந்த நிதிக்கு திறைசேரியின் செயலாளரே பொறுப்பாக இருப்பதால், அவ்வாறு கடனாளிகளை தள்ளுபடிசெய்வதானின் அது தொடர்பில் பிரதான கணக்காளரினால் திறைசேரியின் செயலாளருக்கு அறிவித்து அனுமதி பெறவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கல்தமுல்ல தளபாடத் தொழிற்சாலையில் நிலவும் நட்டத்தை இலாபமாக மாற்றுவதற்கு 2012இல் இடம்பெற்ற கோப் குழுவினால் உத்தரவு வழங்கப்பட்டிருந்தாலும், இது இன்னமும் நட்டமடைந்த நிலையில் இருப்பது தொடர்பிலும் கோப் குழு கவனம் செலுத்தியது.

இவ்வாறான நட்டத்தில் இந்த நிறுவனத்தை நடத்திச் செல்வதன் அவசியம் என்ன என கோப் குழுவின் தலைவர் வினவினார். பொதுவாக எடுத்துக்கொண்டால் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான விற்பனை நிலையங்களில் பாரிய நாட்டம் ஏற்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

பொபிக்னி நகரசபை முதல்வருக்கும் யாழ்.மாநகர சபை மேயருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல்

பிரெஞ்சு நாட்டிலுள்ள பொபிக்னி (Bobigny) நகரசபையின் முதல்வருக்கும் யாழ்.மாநகர சபை மேயருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று கடந்த 25ஆம் திகதி பொபிக்னி நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழர்கள் தங்களுடைய நீண்ட கால அரசியல் அபிலாஷைகள் மற்றும் பொபிக்னி நகர சபையுடன் இணைந்து யாழ்.மாநகர சபை எவ்வாறு பணியாற்றலாம் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பொபிக்னி நகர முதல்வர் அதன் பிரதி முதல்வர், நகர சபை உறுப்பினர்கள், யாழ்.மாநகர சபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொபிக்னி நகர சபையிருக்கு யாழ்.மாநகர சபையினால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலாசார பண்பாட்டு விழாவின் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர முதல்வர், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அழகுக்கலை கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிவைப்பு

(இக்பால் அலி)

கொழும்பு முகரை தலைமையகமாக கொண்டு, இயங்கிவரும், பெண்களுக்கான அழகுக்கலை நிருவனமான "Stardom Academy" அதில் கல்வி கற்ற மாணவிகளுக்கான முதல் கட்ட கற்கை நெறியை பூர்த்தி செய்து கொண்டது.

இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும், கொழும்பு பழைய தபாற்கந்தோர் கேட்போர் கூடத்தில், அதன் பணிப்பாளர் என். ஹம்ஸியா மற்றும் இயக்குனர் எச். ஏ. எம். ஆஸிப் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக தெஹிவளை நகர சபை அங்கத்தவரான திருமதி முஸ்தபா ஸரீனாவும், மற்றும் அதிதிகளாக எம். ரியாஸ் - பணிப்பாளர் குளோப் எகடமி, எம். ராஸிக் - இயக்குனர் கிளோப் எகடமி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

டைரோலுக்கு புதிய துணைத் தூதுவர் நியமனம்

ஆஸ்திரியாவின் டைரோல் நிர்வாகப் பகுதியில் இலங்கையின் புதிய துணைத் தூதுவராக கலாநிதி கிறிஸ்டியன் ஸ்டெப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் தூதுவர் மஹிந்த ஜயசிங்கனினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலாநிதி கிறிஸ்டியன் ஸ்டெப்பன் இன்ஸ்புருக் மற்றும் போலோக்னா பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளில் கலாநிதிப் பட்டம் பெற்றார். கலாநிதி ஸ்டெப்பன் போலோக்னா, பிராங்போர்ட், இன்ஸ்புருக், பாவியா மற்றும் ட்ரையஸ்ட் பல்கலைக்கழகங்களில் உள்ள சர்வதேச பட்டதாரிப் பாடசாலையின் அறிஞராவார். தற்போது, இலங்கையில் வணிக அபிவிருத்தி நடவடிக்கைகளை நிர்வகிக்கும் டிமட் - ர.எல். மெடிக்கல் எலக்ட்ரோனிக்ஸில் கலாநிதி ஸ்டெப்பன் பணிபுரிகின்றார். அவர் ஜேர்மன், ஆங்கிலம், ரஷ்யன், இத்தாலியன் மற்றும் பிரஞ்சு மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்.

விவசாயம் மற்றும் வனவியல் ஆகியவை டைரோலில் ஒரு விசேட இடத்தைப் பிடித்துள்ளன. பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பண்ணைகள் பல நூற்றாண்டுகளாக டைரோலில் நிலப்பரப்பு மற்றும் கலாசாரத்தை வடிவமைத்துள்ளன. டைரோலின் மிக முக்கியமான துறையாக மூன்றாம் நிலைத்துறை விளங்குகின்றது. இப்பகுதியில் சுற்றுலாத்துறைக்கு தனி இடம் உண்டு.

ஆஸ்திரியா, பொல்ஸியா மற்றும் ஹெர்சேவினா மற்றும் ஹங்கேரியில் உள்ள சால்ஸ்பர்க்கில் புதிய துணைத் தூதுவர்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளதாக தூதரகம் அறிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் செலவுகளை கட்டுப்படுத்த நிதி அமைச்சினால் புதிய சுற்றுநிரூபம் வெளியீடு

பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கோடு நிதியமைச்சு புதிய சுற்றுநிரூபமொன்றை வெளியிட்டுள்ளது.

அரச சேவைச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் அனைத்து அமைச்சுக்கள், அரச அமைச்சுக்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு இதுதொடர்பாக விசேட சுற்றறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் (26) விடுத்துள்ளார்.

அரச நிதியை பொறுப்பாகவும், முகாமைத்துவத்துடனும் பயன்படுத்த வேண்டுமென்று இந்த சுற்றுநிரூபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் யெற்றிட்டங்களின்போது செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திட்டச் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், எரிபொருள் மற்றும் தகவல் தொடர்புச் செலவுகளைக் குறைத்தல், நலன்புரி மற்றும் நிவாரணச் செலவினங்கள் போன்ற 17 விடயங்களை கொண்ட வழிகாட்டுதல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

அரச செலவினத்தை அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தி கடுமையான நிதி கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு இடையிலான தொலைத்தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு உயர்ந்த பட்ச அளவில் இலத்திரனியல் முறைமைகளைப் பயன்படுத்துவதன் மூலம் காகிதாதிகளுக்கான செலவினத்தை குறைக்க முடியும் என்று நிதியமைச்சின் புதிய சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம் தொழில் வல்லுநர்களின் தலைமையில் உருவாகிறது புதிய அரசியல் கட்சி

அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிப்பதற்கும், மாவட்டங்களிலும் இலங்கை மக்கள் சார்பாக இளம் தொழில் வல்லுநர்கள் போட்டியிடுவதற்கும் வழிவகை செய்து வருவதாக இலங்கைக்கான இளம் தொழில் வல்லுநர்கள் இயக்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து அந்த இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள இத் துரதிர்ஷ்டமான நிலைமைக்கு நியாயமும் நேர்மையும் இல்லாதவர்களுக்கு தலைமைப் பதவிகள் வழங்கப்பட்டமட்டுமே காரணமாகாது, இன்றைய எமது தலைவர்களில் பெரும்பாலானோர் ஓய்வுபெறும் வயதைக் கடந்தவர்களாகவும் இன்றைய உலகுடன் அதிக தொடர்பில்லாதவராக இருப்பதாலும் இன்னும் குறித்த தலைவர்களுக்கு தாம் வழிநடத்த முயற்சிக்கும் ஆட்சித்துறை தொடர்பான அறிவு காணப்படாமையையும் காரணங்களாக குறிப்பிடலாம். இன்றைய நிலையில் இலங்கைக்கு உலகளாவிய கிராமத்துடன் மிகவும் இணக்கமாக இருக்கின்ற உண்மையில் தகுதி, அறிவு மற்றும் பல்வேறு துறைகளில் அனுபவம் வாய்ந்த இளைஞர்களே தேவை.

"இலங்கைகான இளம் தொழில் வல்லுநர்கள்" குழுவானதாங்கள், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம். அதில் அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிப்பதற்கும், அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் இலங்கை மக்கள் சார்பாக இளம் தொழில் வல்லுநர்கள் போட்டியிடுவதற்கும் வழிவகை செய்து வருகின்றோம். எங்களின் சாலை வரைபடம் மற்றும் அறிக்கையை விரைவில் மக்களுக்கு வெளியிடுவோம் - என்றுள்ளது.

விவசாயிகளினால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (26) கொழும்பு, புறக்கோட்டை பிரதான புகையிரத நிலையத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)

தஞ்சை தேர்த் திருவிழாவின்போது விபரீதம்:

மின்சாரம் தாக்கி 11 பேர் பரிதாபப் பலி: 17 பேர் படுகாயம்; ஒருவர் கவலைக்கிடம்!

குடியரசுத் தலைவர் - பிரதமர் மோடி இரங்கல்; தஞ்சை விரைந்து முதலமைச்சர் ஆறுதல்

தஞ்சை அருகே தேர்த் திருவிழாவின்போது உயரழுத்த மின்கம்பியில் தேர் உரசியதில் மின்சாரம் தாக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தஞ்சாவூர் அருகே களிமேடு அப்பர் கோவிலில் 94ஆவது ஆண்டு அப்பர் குருபூஜை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குருபூஜையை முன்னிட்டு நள்ளிரவு 12 மணிக்கு தொடங்கி அதிகாலைவரை தேரோட்டம் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் நள்ளிரவில் தேரோட்ட நிகழ்ச்சி தொடங்கிய நிலையில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம்பிடித்து இழுத்தனர்.

அதிகாலையில் பூதலூர் சாலையில் தேர் வந்தபோது, ஒரு வீட்டில் பூஜை செய்துவிட்டு தேரை திருப்ப முயன்றுள்ளனர். அங்கு வீதி விரிவாக்கப் பணிக்காக குழி தோண்டப்பட்டு மண்ணைக்கொண்டு மூடப்பட்டிருந்தது. அந்த மணல் மேட்டில் தேரின் சக்கரம் சிக்கி, தேர் சாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்போது தேர் உயரழுத்த மின்கம்பியின் மீது உரசியதில், தீப்பொறி கிளம்பி மரத்தால் செய்யப்பட்ட அத்தத் தேர் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதனைக் கண்டு அங்கிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடிய நிலையில், தேருக்கு அருகிலிருந்த இரண்டு சிறுவர்கள் உட்பட 11 பேர் மின்சாரம் தாக்கியும், தீயில் எரிந்தும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். காயமடைந்த 17 பேர் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், தேர்த் திருவிழாவில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூற நேற்று தஞ்சைக்கு விரைந்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தலா 5 இலட்சம் ரூபா நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார். மேலும், விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

தஞ்சை விரைந்துள்ள முதலமைச்சர் விபத்து நிகழ்ந்த இடத்தை நேரில் ஆய்வு செய்யவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் தேர்த் திருவிழா விபத்தில் உயிரிழந்தோருக்கு தமிழக கட்டப்பேரவையில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனிடையே உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் வழங்க பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, அ.தி.மு.க. சார்பில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி - ஐ.நா. பொதுச் செயலாளர் சந்திப்பு: மக்களை வெளியேற்ற ஒத்துழைப்பதாக புட்டின் உறுதி

ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ள மரியுபோல் நகரில் இரும்பு ஆலையில் தஞ்சமடைந்துள்ள பொதுமக்களை வெளியேற்றும் ஐ.நா. மற்றும் செஞ்சுலுவை சங்கத்தின் முயற்சிக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அண்டானியோ குட்டேரஸ், நேற்றுமுன்தினம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை மொஸ்கோவில் சந்தித்துப் பேசினார். அப்போது உக்ரைனில் மரியுபோல் நகரில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களை வெளியேற்ற உதவுமாறு குட்டேரஸ் கேட்டுக் கொண்டார். இதற்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ள புட்டின், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள் போராடிவரும் டான்பாஸ் பிராந்திய பிரச்சினைகளில் முடிவு எட்டப்படாமல் பாதுகாப்பு உத்தரவாதத்தில் கையெழுத்திட முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

உக்ரைனுடனான பேச்சு சாதகமான பலனை தரும் என்று தாம் நம்புவதாகவும் புட்டின் தெரிவித்துள்ளார். மரியுபோல் நகரத்திலிருந்து பொதுமக்களை மீட்க ஒத்துழைப்புத் தருவதாக புட்டின் உறுதியளித்துள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சுலுவை சங்கம் தீவிரப்படுத்தியுள்ளது. இந்நிலையில், ரஷ்யாவின் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர், சிறுமிகளை உக்ரைன் ஜனாதிபதி ஸெலன்ஸ்கி நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். அப்போது அவர்களுக்கு அப்பிள் ஐபேட்களை வழங்கி விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாகவும் தெரிவித்தார்.

ரஷ்யப் படை அட்டூழியம்

உக்ரைனில் பல நகரங்களில் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பாக பெண்களை ரஷ்யப் படைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்ய போர்த் தொடுத்தது. போரால் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், சுமார் 52 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில், போர் இன்று 64 நாட்களை கடந்துள்ளது.

முதற்கட்ட போரில் ரஷ்யா பின்வாங்கியதால், மரியுபோல், கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியம் உள்ளிட்ட பகுதிகள் மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்ற தீவிர முயற்சிசெய்து வருகிறது. மரியுபோலிலுள்ள அசோவ்ஸ்டல் இரும்பு தொழிற்சாலையை கைப்பற்ற இருதரப்பினரும் தீவிர போரிட்டு வருகின்றன.

கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்ற அதிரடி தாக்குதல் நடத்திவரும் ரஷ்யா, 2 நாட்களுக்கு முன் ஒரே இரவில் 423 இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. போர் விமானம், ஹெலிகொப்டர், 9 ஆயுதக் கிடங்குகளையும் அழித்துள்ளது. உக்ரைன் இராணுவத்தை முற்றிலும் முடக்கும் வகையில் ரயில் நிலையம், எரிபொருள் கிடங்குகள், மேற்கு நாடுகள் வழங்கியுள்ள ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்குகளையும் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

கிழக்கு பகுதியில் ரஷ்யா இன்னும் முழுமையான தரைவழித் தாக்குதலை மேற்கொள்ளவில்லை. ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தி, பின்னாலிருந்து இராணுவ வீரர் துப்பாக்கிசூடு நடத்துகின்றனர். நாடு முழுவதும் இருந்து இடம்பெயர்ந்து மக்கள் தஞ்சம் புகுந்துள்ள மோஹிது எல்லைக்கு அருகிலுள்ள மேற்கு நகரமான எல்விவ் அருகே ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

ரஷ்யா தங்களது படைகளை பின்வாங்கிய பல இடங்களில் இனப்படுகொலை, பாலியல் துஷ்பிரயோகம், சித்ரவதை போன்ற போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக உக்ரைன் உள்ளிட்ட உலக நாடுகள் குற்றஞ்சாட்டி வந்தன. இதை உறுதிப்படுத்தும் வகையில், புச்சா, இர்பின், கீவ் புறநகர்ப் பகுதிகளில் கொத்துக்கொத்தாக சடலங்கள் புதைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில், பல பெண்கள் கொல்லப்படுவதற்கு முன்பு கொடூரமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து தடயவியல் மருத்துவர் விளாடிஸ்லாவ் பைரோவ்ஸ்கி தெரிவிக்கையில்,

"ரஷ்யப் படைகளால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பு உக்ரைன் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். ஒரு நாளைக்கு சுமார் 15 உடல்களை பரிசோதித்து வருகிறேன். அவர்களில் பலர் கடுமையாக சிதைக்கப் பட்டுள்ளனர். வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். புச்சாவில், 25 பெண்கள் ஒரு பதுங்கு குழியில் வைக்கப்பட்டு, ரஷ்யப் படைகளால் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். இதற்கான ஆதாரங்களை சேகரித்து வருகிறோம்" - என்றார்.

ரஷ்யாவை அழிக்க முயற்சி

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவிக்கையில், அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ரஷ்ய சமூகத்தை பிளவுபடுத்தவும், ரஷ்யாவை உள்ளிருந்து அழிக்கவும் முயற்சிக்கின்றன - என்றார்.

மரியுபோலில் மேலும் சடலங்கள்

மரியுபோலில் பிரமாண்ட புதைகுழிகள் தோண்டி சுமார் 10,000 அப்பாவி மக்களை ரஷ்யப் படைகள் புதைத்திருப்பது, இரண்டு கட்டமாக செயற்கைகோள் படம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில், மேலும் ஒரு பிரம்மாண்ட புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில், கொத்துக்கொத்தாக சடலங்கள் உள்ளதாக கூறப்படுகிறது. எவ்வளவு சடலங்கள் உள்ளன என்பதை மதிப்பிட அதிகாரிகள் முயற்சித்து வருவதாக மேயர் வாடிம் பாய்சென்கோ தெரிவித்தார்.

உலக செய்திகள்

இலஞ்ச வழக்கு:

ஆங் சான் சூகிக்கு 5 ஆண்டுகள் சிறை

இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

இலஞ்ச, ஊழல் வழக்கில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி குற்றவாளி என அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மியான்மாரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 76 வயதான ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி அரசை கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரியில் இராணுவம் கலைத்தது. இதனைத் தொடர்ந்து அரசின் தலைமை ஆலோசகராக இருந்த ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உட்பட அரசின் முக்கிய தலைவர்கள் பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஆங் சான் சூகி மீது கொரோனா கட்டுப்பாடுகளை மீறியது, முறைகேடாக வாக்கி டோக்கி வாங்கியது, மக்களை போராட்டத்தில் ஈடுபட தூண்டியது மற்றும் ஊழல் என அவர் மீது 15இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன.

இதில், அரசியல் தலைவர் ஒருவரிடமிருந்து தங்கம் மற்றும் பல ஆயிரம் டொலர்களை இலஞ்சமாக பெற்றதாக சூகிக்கு எதிரான இராணுவ நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் விசாரணைகள் முடிந்துள்ளன. இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தீர்ப்பை நீதிமன்றம் நேற்றைய திகதிக்கு ஒத்திவைத்தது. இந்நிலையில், ஊழல் வழக்கில் ஆங் சான் சூகி குற்றவாளி என மியான்மர் இராணுவ நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும் சூகிக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேரறிவாளனை நாங்களே ஏன் விடுவிக்கக்கூடாது?

உயர் நீதிமன்றம் கேள்வி

"மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரின் அதிகாரங்களுக்குள் போகாமல் பேரறிவாளனை நாங்களே ஏன் விடுவிக்கக்கூடாது?" என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் தன்னை விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் பேரறிவாளன் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேற்று விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், பேரறிவாளனை விடுதலை செய்வதே இந்த வழக்கை முடித்துவைக்க ஒரே தீர்வு என்று குறிப்பிட்டனர்.

மேலும், மத்திய அரசுக்கும் ஆளுநரின் அதிகாரம் குறித்தும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் காரசார கேள்விகளை நீதிமன்றத்தில் எழுப்பினர்.

சொற்தக் கண்னோட்டத்தில் செல்ல ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்திருக்கும் நீதிபதிகள், ஆளுநரின் அதிகாரங்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வழக்கு விசாரணையின்போது நீதிபதிகள் கூறியிருப்பதாவது,

மாநில அமைச்சரவை அனுப்பக்கூடிய பரிந்துரைகளை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநருக்கு என்ன அதிகாரம் உள்ளது?

பேரறிவாளன் விவகாரத்தில் ஆளுநரின் பதில் ஒவ்வொரு முறையும் முரணாகவே உள்ளது. ஆளுநர், குடியரசுத் தலைவரின் அதிகாரங்களுக்குள் போகாமல் பேரறிவாளனை நாங்களே ஏன் விடுவிக்கக் கூடாது?

மாநில அமைச்சரவையின் ஒவ்வொரு முடிவுக்கும் எதிராக ஆளுநர் செயற்பட்டால், அது கூட்டாட்சி அமைப்பில் மிகப்பெரிய பாதகத்தை ஏற்படுத்தும். மாநில ஆளுநர் அமைச்சரவை முடிவுக்கு எதிராக சொந்தக் கண்னோட்டத்தில் செல்ல முடியாது என்றும் குறிப்பிட்டனர்.

மேலும், பேரறிவாளனை விடுவிப்பது தொடர்பான தனது நிலைப்பாட்டை மத்திய அரசு ஒரு வாரத்தில் தெரிவிக்கவேண்டும் என்றும் பேரறிவாளன் வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் தமிழக அரசுக்கும், வழக்குரைஞருக்கும் உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸுக்கு கொரோனா

அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதென வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதுகுறித்து துணை ஜனாதிபதியின் ஊடக செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

"சிஎஸ்ஆர் பரிசோதனையில் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதுடன், அவருக்கு அறிகுறியற்ற பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், துணை ஜனாதிபதி மாளிகையிலிருந்து வழக்கமான அலுவல் பணிகளை அவர் மேற்கொள்வார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவரும் நிலையில், துணை ஜனாதிபதிக்கு கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ளது.

ஏற்கனவே கமலா ஹரிஸின் கணவர் டக் எம்ஹாஃபுக்கு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கொரோனா பாதிப்பு உறுதியான நிலையில், தற்போது அவருக்கும் நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

மேலும் கமலா ஹரிஸ் முறையாக மூன்று கொரோனா தடுப்பூசிகளும் செலுத்திக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய், ஆசிய விளையாட்டுகளுக்கான இலங்கை மெய்வல்லுனர் குழாம் அறிவிப்பு

ஆவது ஆசிய விளையாட்டு விழா மற்றும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா ஆகிய போட்டித் தொடர்களுக்கான 22 பேர் கொண்ட இலங்கை மெய்வல்லுனர் குழாம் வெளியாகியுள்ளது.

மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டிகள் மற்றும் 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் ஆகியவற்றில் வீரர்கள் வெளிப்படுத்திய அதிசிறந்த ஆற்றல்கள் மற்றும் அடைவு மட்டங்களின் அடிப்படையில் இரண்டு பிரதான சர்வதேச விளையாட்டு விழாவுக்கான வீர, வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு 21 வீர, வீராங்கனைகளும், சீனாவின் ஹாங்சுவில் செப்டெம்பர் 10ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவுக்கு 8 வீர, வீராங்கனைகளும் பெயரிடப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் வசித்துவரும் இலங்கை மரதன் ஓட்ட வீராங்கனையான ஹிருணி விஜேரட்ன பொது நலவாய விளையாட்டில் மாத்திரம் போட்டியிடவுள்ளார். இதேவேளை, ஆசிய விளையாட்டு விழா வரலாற்றில் முதல் முறையாக கலப்பு அஞ்சலோட்டத்தில் இலங்கை அணி களமிறங்கவுள்ளதுடன், ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்திலும், 10 ஆண்டுகளுக்குப் பிறகு பெண்களுக்கான 4×100 மீற்றர் அஞ்சலோட்டத்திலும் இலங்கை சார்பில் அணிகள் களமிறங்கவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான மெய்வல்லுநர் விவரம்

ஆண்கள் : சுமதே ரணசிங்க - ஈட்டி எறிதல், காலிங்க குமார - 400 மீற்றர் ஓட்டம், யுப்புன் அபேகோன் - 100 மீற்றர் ஓட்டம், உஷான் திவங்க - நீளம் பாய்தல்

பெண்கள் : நிலானி ரத்நாயக்க - 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம், கயன்திக்கா அபேரட்ன - 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டம், சாரங்கி சில்வா - நீளம் பாய்தல், ஹிருணி விஜேரட்ன - மரதன்

ஆசிய விளையாட்டு விழாவுக்கான மெய்வல்லுநர் விவரம்

ஆண்கள் : சுமதே ரணசிங்க - ஈட்டி எறிதல், காலிங்க குமார - 400 மீற்றர், கலப்பு 4 × 400 மீற்றர், யுப்புன் அபேகோன் - 100 மீற்றர், உஷான் திவங்க - நீளம் பாய்தல், ரொஷான் ரணதுங்க - 110 மீற்றர் சட்டவேலி ஓட்டம், சமல் குமாரசிறி - முப்பாய்ச்சல், தனுஷ்க சந்தருவன் - நீளம் பாய்தல், அருண தர்ஷன - 400 மீற்றர், கலப்பு 4 × 400 மீற்றர், இசுரு லக்சான் - கலப்பு 4 × 400 மீற்றர், பசர நிக்கு - கலப்பு 4 ×400 மீற்றர், வீ.தேஷான் - கலப்பு 4 × 400 மீற்றர்

பெண்கள் : நிலானி ரத்நாயக்க - 3000 மீற்றர் தடைத்தாண்டல், கயன்திக்கா அபேரட்ன - 800 மீற்றர், 1500 மீற்றர், சாரங்கி சில்வா - நீளம் பாய்தல், தருஷி கருணாரட்ன - கலப்பு 4 × 400 மீற்றர், நதீஷா ராமநாயக்க - கலப்பு 4 × 400 மீற்றர், அமாஷா டி சில்வா - 100 மீற்றர், 4 × 100 மீற்றர், ருமேஷிக்கா ரத்நாயக்க - 4 ×100 மீற்றர், ஷெலின்டா ஜென்சன் - 4 × 100 மீற்றர், மெதானி ஜயமான்ன - 4 × 100 மீற்றர், லக்சிகா சுகந்தி - 4 × 100 மீற்றர்.

பராக் – ஹர்ஷல் இடையில் வார்த்தைப் போர்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கிடையிலான போட்டியின் போது ஆக்ரோஷமாக காணப்பட்ட ஹர்ஷல் பட்டேல், ரியன் பராக் உடன் வார்த்தை மோதலில் ஈடுபட்டார்.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்கள் எடுத்தது. இதைத் தொடர்ந்து 145 என்ற வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய பெங்களூர் அணி, ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பெங்களூர் அணியின் கடைசி ஓவரை ஹர்ஷல் பட்டேல் வீசினார். இந்த ஓவரில் பராக் ஒரு பவுண்டரி மற்றும் 2 சிக்சர் அடித்தார். முதல் இன்னிங்ஸ் நிறைவுபெற்றதை அடுத்து ரியான் பராக் ஒய்வு அறை நோக்கிச் செல்ல, திடீரென ஹர்ஷல் பட்டேல் அவரை நோக்கி வேகமாக வந்தார்.

ஆக்ரோஷமாக காணப்பட்ட அவர் ரியன் பராக்கிடம் வார்த்தை மோதலில் ஈடுபட்டார். பின்னர் ராஜஸ்தான் அணியைச் சேர்ந்த உதவியாளர் ஒருவர் அவரை தடுத்து நிறுத்தினார். இந்த மோதலுக்கான காரணம் என்னவென தெரியவரவில்லை.

அவுஸ்திரேலிய முதல் முஸ்லிம் பெண் குத்துச்சண்டை வீராங்கனை

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்காக போட்டியிடும் முதல் முஸ்லிம் பெண் குத்துச்சண்டை வீராங்கனை என்ற பெருமையை டினா ரஹிமி (26 வயது) பெறவுள்ளார். இவர் 57 கிலோகிராம் பிரிவில் எட்டு அறிமுக வீரர்களில் ஒருவராக பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுநலவாய விளையாட்டுப் பதக்கம் வென்ற கெய்ட்லின் பார்க்கர், கேய் ஸ்காட், கிறிஸ்டி ஸ்காட் ஆகியோருடன் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் மாதம் தேர்ந்தெடுத்த பிரிவில் டினா ரஹிமி அவுஸ்திரேலிய சம்பியனானார் மற்றும் 15-2 என்ற வெற்றி-தோல்வி சாதனையைப் பெற்றுள்ளார்.

ஏழு ஆண் வீரர்களும், நான்கு பெண் வீரங்கனைகளும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவார்கள். அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கான குத்துச்சண்டை தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது.

உதைபந்து உலகுக்கு விடைகொடுக்கும் யூரோ நாயகன்

இத்தாலி தேசிய உதைபந்து அணியின் தலைவரான ஜியோர்ஜியோ சில்லினி எதிர்வரும் ஜூன் மாதத்துடன் சர்வதேச உதைபந்து அணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஜுவென்டஸ் உதைபந்து அணியின் ஜாம்பவானும், இத்தாலி தேசிய உதைபந்து அணியின் தலைவருமான ஜியோர்ஜியோ சில்லினி உதைபந்து உலகில் சிறந்த வீரர்களுள் ஒருவராகத் திகழ்கிறார். கடந்த ஆண்டு நடைபெற்ற யூரோ உதைபந்து கிண்ணத்தை இங்கிலாந்து அணியுடன் இறுதிப் போட்டியில் மோதி இத்தாலி அணிக்கு வென்று கொடுத்தார்.

இந்நிலையில், எதிர்வரும் ஜூன் மாதம் இத்தாலி தேசிய அணியிலிருந்து தான் ஓய்வு பெறப் போவதை உறுதிசெய்துள்ளார் ஜியோர்ஜியோ சில்லினி.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

கோலூன்றி பாய்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தங்கப்பதக்கம்

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் விளையாட்டுத் தினைக்கள விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் ப. ஜெயகுமார் அண்மையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான வளர்ந்தோர்களுக்கான கோலூன்றி பாய்தலில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

களுதாவளையை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும்கொண்ட இவர், 1972-1978 காலப்பகுதியில் களுதாவளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும்போது விளையாட்டில் ஆர்வம் காட்டியுள்ளதுடன், மேலும் உயர் கல்வி தொடர்வதற்காக மட்/மேதடிஸ்த மத்திய கல்லூரியில் சேர்ந்து 1979-1984 வரை இப்பாடசாலையின் விளையாட்டுத்துறையில் திறமைகளை காட்டி மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன், விளையாட்டு அமைச்சு மற்றும் இளைஞர் சேவை மன்றம் என்பவற்றினால் நடத்தப்பட்ட போட்டிகளிலும் பங்குகொண்டு பல சாதனைகளை தனதாக்கி பல பதக்கங்களை வென்றுள்ளார்.

மெய்வல்லுனர் விளையாட்டுகளான 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல், கோலூன்றி பாய்தல், முப்பாய்ச்சல், தடைதாண்டல் மற்றும் அஞ்சல் ஓட்டங்களிலும் பங்கேற்று பல வெற்றிகளை தனதாக்கியதுடன் நின்றுவிடாது, ஆரம்பக்காலங்களில் களுதாவளை கெலிஉ விளையாட்டுக் கழகத்தில் பங்கேற்று பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்ததுடன், 1982-1993 வரை மட்டக்களப்பு பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தில் பல மெய்வல்லுனர் போட்டிகளிலும் கலந்துகொண்டுள்ளார்.

RR vs RCB போட்டியை காண

கடந்த 2020, 2021ஆம் ஆண்டு நடைபெற்ற வளர்ந்தோருக்கான 100 மீற்றர் நீளம் பாய்தல் மற்றும் கோலூன்றி பாய்தல் போட்டிகளில் வெற்றியீட்டி முறையே வெள்ளிப்பதக்கத்தையும், தங்கப்பதக்கத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெற்றுத்தந்துள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள் சீனாவில் நடைபெறுவள்ளதுடன், இப்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இவர் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"மொயீன் அலிக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை"

- சி.எஸ்.கே. பயிற்சியாளர் பிளெமிங்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய சகலதுறை வீரராக மொயீன் அலி விரைவில் உடல் தகுதி பெறுவார் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்ரீபன் பிளெமிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர்களான தீபக் சாஹர், ஆடம் மில்னே ஆகியோர் உபாதை காரணமாக விலகிவிட்டனர். இந்நிலையில், பயிற்சியின்போது கணுக்காலில் காயமடைந்த சகலதுறை வீரர் மொயீன் அலி இறுதியாக பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆடவில்லை. பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்த பிறகு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்ரீபன் பிளெமிங் அளித்த பேட்டியில்,

"மொயீன் அலியால் கணுக்காலை அசைக்க முடிகிறது. "எக்ஸ்ரே" எடுத்துப்பார்த்ததில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. இதுபோன்ற காயத்திலிருந்து மீள ஒருவாரம் பிடிக்கும். எலும்பு முறிவு ஏற்படாததால் மொயீன் அலி விரைவில் முழு உடல் தகுதியை எட்டுவார் என்று நம்புகிறோம்" - என தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber

இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது